



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. குணராசா
மேலதிக அரசாங்க அதிபர் (காணி
பிரதிக் காணி ஆணையாளர்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திம் தரிகிட தித்தோம்

செங்கை ஆழியான்

யாழ். இலக்கிய வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O முதற் பதிப்பு: யூன் 1988

(C) திருமதி கமலா குணராசா,
82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

O அச்சுப் பதிவு: கமலம் பதிப்பகம்.

O அட்டை: பேபி போட்டோ/தவம்/விஜயா பிரின்டேர்ஸ்

O வெளியீடு: யாழ். இலக்கிய வட்டம் — 40

விலை: 15/-

▭ THEEM THARIKIDA THITHTHOM — A Novel in Tamil by Sengaiaaliyan. (K. Kunarasa B. A. Hons (Cey), M. A., S. L. A. S.) □ (C) Kamala Kunarasa, 82, Brown Road, Jaffna. □ First Edition: June 1988. □ Published by: Jaffna Literary Circle, Jaffna. □ Cover Design: Baby Photo. Jaffna. □ Pages: 12 + 80 = 92. □ Price: Rs. 15-00

விற்பனையாளர்:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர்

## செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் வழங்கிய

## அணிந்துரை

உலக ரீதியில் உன்னதமான நாவல் என்று கணிக்கப்பட்ட ஒரு படைப்பு இன்னும் தமிழில் வெளிவரவில்லை. அத்தகைய ஒரு நாவலை எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் எம்மிடையே இருவர்: ஒருவர் கே. டானியல், அவர் இப்போது இல்லை; மற்றவர் செங்கை ஆழியான். இன்னும் கால் நூற்றாண்டு காலத்திற்கு மேல் எழுதக்கூடிய வயதினர்.

செங்கை ஆழியான் தன்னுடைய இன்றைய வளர்ச்சியின் பரிணாமத்தை நன்கு அறிந்தவர்; அதை மூன்று கால கட்டங்களாக இனம் கண்டவர். (முன்னுரை, காட்டாறு). எதிர் காலத்தில் அவர் சாதிக்க வேண்டியதை எடுத்துக்காட்டுவது, இலக்கியத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும்.

தமிழிலே, முக்கியமாக நமது நாட்டிலே, வெளிவரும் நாவல்களில் பெரும்பாலானவை குறு நாவல்கள் தாம்; அல்லது பூரண வளர்ச்சியடையாத குறளை நாவல்கள். இதற்குப் பல காரணங்கள்; முக்கியமாக அவை பொருளாதார வசதி சம்பந்தமானவை. தமிழன் மாடமாளிகைகள் கட்டும் நிலையில் இல்லை; சிறு வீடுகளைத்தான் கட்டிப் பெயர் சூட்டி, புதுமனை புகுவிழா கொண்டாடி மகிழ முடியும். இலக்கிய முயற்சிகளும் அவ்வாறே. இப்போதைய நிலையில், தாஜ் மகாலும், மீனாட்சி கோவிலும் கட்டுவதற்கோ, உட்கார்ந்து இராமாயணம், அன்னாகரீனா, டொக்டர் ஷிவாகோ எழுதுவதற்கோ வசதிகள் இல்லை; இப்படியாகப், பல விதங்களில் 'வசதி' என்ற போஷணை கிடையாவிடில், ஒருவரின் ஆற்றல் வளருவதற்கும் வாய்ப்பு மந்தமாகும்.

செங்கை ஆழியான் இயற்கையாகவே எழுதும் ஆற்றல் மிகுந்தவர். 1962 ஆம் வருடம் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலம் தொடக்கம், கால் நூற்றாண்டு காலமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திர நாவல், சமூக நாவல், நகைச்சுவை நாவல் என்னும் வகையில், அவர் பேனு வைத்த ஆக்கங்களிலே எல்லாம் அந்த ஆற்றல் தெரிகின்றது. அந்த ஆற்றல் பெரும்பாலும் 100 – 200 பக்கங்களுக்குள் அடங்கிக் கிடக்கின்றது.

நாவலின் வகையில் மட்டுமல்ல, எடுத்துக் கொண்ட பகைப்புலத்தின் காட்சியிலும், கருத்துக்களின் ஆட்சியிலும் அவரின் புலமை புலனாகின்றது. சுருட்டுத் தொழிலாளர் (இரவின் முடிவு), சலவைத் தொழிலாளர் (பிரளயம்), மீனவர் (வாடைக் காற்று), காடு சார்ந்த விவசாயிகள் (காட்டாறு) ஆகியோரின் வாழ்வு தாழ்வுகளை மனிதாபிமானம் மிளிரக் காட்டியுள்ளார். அவருடைய 'வாடைக் காற்று' இலக்கிய உலகில் வீசியபோது பல விதமான விமர்சன ஓசைகளை உண்டுபண்ணியது. அதைத் தொடர்ந்து வந்த 'காட்டாறு' நாவலாசிரியர் என்ற முறையில், அவர்மேல் பெரும் மதிப்பையும் நியாயமான நம்பிக்கையையும் வைக்கச் செய்தது. அந்த நாவல் தரமான உரை நடை இலக்கியத்திற்கு அவரால் ஆற்றக்கூடிய சேவையின் முதற்படி ஆகும்; அநேகரால் இன்னும் கால் எடுத்து வைக்காத கட்டம் அது.

தீம் தரிகிட இத்தோம் – என்ற இந்த நூல் ஒரு புதிய முயற்சி; 800 பக்கங்களில் காவியமாக எழுதப்பட வேண்டிய கருப்பொருளும் உருவப் பொருளும், அப்படியாக எழுதக் கூடிய ஆற்றல் உள்ள ஒருவரால், 80 பக்கத்தில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஆல் ஆகப் பரந்து நிற்கவேண்டிய ஒரு விருட்சம், ஒற்றைக் கொப்பு வைத்த தென்னையாகி, புதுமை என்ற தனால், பார்ப்பதற்கு கவர்ச்சியாக உள்ளது. இது இன்றைய சமூகக் குறுநாவல்; வருங்காலத்தின் சரித்திரக் குறு நாவல்.

இது போன்ற கருவும், உருவும், திருவும் கொண்டதாக ஓர் உரை நடைக் காவியம் படைப்பதற்கும் மிகவும் தகுதியானவர் செங்கை ஆழியான். அது அவருடைய நான் காவது கட்ட வளர்ச்சியாக அமையவேண்டும். அந்த நாவல் 500 - 1000 பக்கங்கள் கொண்டதாக இருக்கும். பக்கங்களின் எண்ணிக்கையை வைத்துத்தான் காவிய - இலக்கிய மேன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவது என்று இல்லை. ஆனால், அழகான சிட்டுக்குருவிக்கு போயிங் விமானத்தின் பாரம் காவும் வலிமை இல்லை என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். உரை நடையில் எழுதப்பட்டு, சர்வதேசப் புகழும் பரிசும் பெற்ற இலக்கியப் படைப்புக்கள், விசாலமான பகைப்புலமும், பலரக கதைமாந்தரும், காத்திரமான கருத்துக்களும் கொண்ட பெரிய நூல்களாக இருப்பது கண்கூடு. கவிதையில் மட்டும்தான் விலை உயர்ந்த இலக்கிய ஆபரணம் செய்ய முடியும். அந்த விலை மதிப்பில் நுட்பமான உரை நடை ஆக்கங்கள் மாமல்லபுரம் போலவும் தஞ்சைக் கோவில்போலவும் விசாலமாகவும் பெரிதாகவும் இருப்பதைத் தவிர்க்கமுடியாது.

செங்கை ஆழியானின் எழுத்து நடையில் வசீகரம் உண்டு. ஆனால், அவர் எழுதியவற்றை ஒரு முறையாவது திருத்தி எழுதுவதில்லை; அது ஒரு தேவையாகவும் அவருக்குத் தோன்றுவதும் இல்லை (ஈழநாடு, 14-12-86). பிறந்த மேனியுடனும் பெற்றவரின் அழுக்குடனும் — First Draft — ஆக இருக்கும் ஆக்கங்களையே நமக்குத் தருகின்றார். இதை அறியும்போது ஆச்சரியமாக இருக்கின்றது. திருத்தி அழகு செய்யாமலே, 'காட்டாறு' போன்ற நாவலை அவர் தரமுடியுமானால் மேல்நாட்டு இலக்கிய மேதைகள் 10 – 15 தரம் திருத்தி அமைப்பது போல், இவர் ஒரிரு தடவையாவது திருப்பி எழுதினால், இவருடைய படைப்புக்களின் ஐசுவரியம் எத்தகையதாக இருக்கும் என எண்ணி அங்கலாய்க்க வேண்டி உள்ளது!

எனக்கு இன்று வயது 60; வயதின் வலுவை வைத்து ஒரு வேண்டுகோள். செங்கை ஆழியான், மக்களுக்குக் குறுநாவல்களைத் தொடர்ந்து தரும் அதே வேளையில், 5 வருடத் திட்டத்திலே தமிழில் ஒரு நாவல் காவியம் படைக்கவேண்டும். அந்த முயற்சி 5 முறையாவது திருத்தி எழுதப்பட்டு, மிகவும் உன்னதமான பரிசாகத் தமிழ் அன்னைக்குத் தரப்பட வேண்டும். அப்போது ஒரு சர்வதேசப் பரிசு செங்கை ஆழியானுக்குக் கிடைக்கலாம்; கிடைக்காமலும் போகலாம். ஆனால், வரும் சந்ததியில் அத்தகைய பரிசையும் பெருமையையும் பெறப் போகும் இலக்கியக் கலைஞன் கண்டிப்பாக, செங்கை ஆழியானின் வாரிசாக இருப்பான்; அல்லது இருப்பாள்.

யாழ். மருத்துவ பீடம், நந்தி
30 – 3 – 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

1956-ம் ஆண்டிலிருந்து ஈழத்தின் கலை, இலக்கிய, கலாசார வெளியீட்டு முயற்சிகள் அனைத்தும் சமூகப்பொறுப்பும் எதிர்காலத்தீர்க்க தரிசனமும் கொண்டு விளங்கி வருவது கண்கூடு.

சமூகப் பிரச்சனைகளை எழுத்தால், எண்ணத்தால், அணுகுமுறையால், தத்துவார்த்தத் தேர்வால் வேறுபட்டு எழுதி வந்தவர்களிடையே கூட, அடிப்படையில் ஒரு பொதுமை வேரோடி நின்றமை குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகும். அது - சமூகப்பிரச்னை; அரசியல் பிரச்னை; பொருளாதாரப் பிரச்னை அனைத்தையும் உள்வாங்கிய இனப்பிரச்னை. இந்த இனப்பிரச்னையின் பாதிப்பிலிருந்து எந்தவொரு எழுத்தாளரும் விடுபடவில்லை என்பதனை அவர்தம் எழுத்துக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சுட்டிக்காட்ட என்றும் தவறியதில்லை. இது விபத்தோ, தற்செயலோ அல்ல; தவிர்க்க முடியாத நியதி.

இந்தப் பிரச்னை ஓட்டங்களில் காலவெளி கலைஞன் அறியாமலே நீட்டம்பெற அதில், கலைஞனும் அவன் வழி வந்த இனமும் தத்தம் இருப்புகளையும், வாழ்விடங்களையும் தேடத் தொடங்கவே, அவன் எழுத்துக்களை ஆழ உழுததைப் போலவே, அகலமாகவும் உழத்தொடங்கின. அதிலிருந்து சிறு கதைகளின் இடத்தையும் சேர்த்து 'நாவல் இலக்கியம்' பிடித்துக் கொண்டது.

இவ்வகைப் 'புதிய நாவல்கள்' கற்பனை கலவாத உண்மைக்கும் அதன் உருவுக்கும் ஏற்பத் தத்தம் எல்லைகளையும் உள்ளடக்கங்களையும் தாமே தோற்றுவித்துக் கொண்டன.

எனவே இந்த நாவல் சத்யமானது; நித்தியமானது.

'தீம் தரிகிட தித்தோம்!' — ஊழி நடனம் எட்டுத்திக்கும் பொடிபட நடக்கின்றது'

அழிவுக்கா? புத்துலகப் படைப்பிற்கா?

பூபாளராகம் கேட்க; செங்கை ஆழியானின் நாவலை யாழ் இலக்கிய வட்டம் புத்துலக மலருக்காக படைத்து வரவேற்புக் கூறுகிறது,

செம்பியன் செல்வன் / தலைவர் யாழ் இலக்கிய வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத்தின் பாதம் இந்தப் பூமியில் பதிந்ததால் சமாதியான மண்ணின் மைந்தர்களில் ஒருவனை என் பெருமகன் க. மதியழகன் நினைவாக, அஞ்சலியுடன் இந் நூலைச் சமர்ப்பிக்கின்றேன். இந்த நாவலின் ஒரு கதாமாந்தராகும் என் அண்ணர் புதுமைலோலனின் அன்புப் புதல்வனுக்கு இந்நூலைக் காணிக்கையாக்க நேர்ந்த விதியை என் சொல்வது?

என்

இனிய

மதி......



க. மதியழகன்

01-04-1964 / 16-10-1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மரணத்துடன், தர்மத்தின் மீதும், சத்தியத்தின் மீதும் நான் கொண்டிருந்த நம்பிக்கை அற்றுப்போய் விட்டது. மின்னாமல் முழங்காமல் நிகழ்ந்துவிட்ட உன் இழப்புத் தரும் தாங்கொணாத் துயரத்தைச் சுமக்கும் பலத்தை, உன்னுடன் ஒன்றிப் பழகியவர்களிடம் விட்டுச் சென்ற ஆழமான நினைவுகளே தருகின்றது. வாழ்வுக் காற்றின் தாலாட்டில் காவோலைகள் கலகலத்து சரியாது நிலைத்திருக்க, இளங் குருத்து மண்ணில் சரிந்த விதியை நினைக்கும்போது, யாரை நோவது?

இந்த மண்ணின் முகத்தில் அயலவரைக் கால்பதிக்கவைத்த காரணகாரியங்களையும், அக்காரண காரியங்களை உருவாக்கிய கர்த்தாக்களையும் கருவிகளையும் நோவதா? மரணங்கள் மலிந்த இந்தப் பூமியில், உதிரும் சடலங்களின் செங்குருதியால் நிறம்மாறு மண்ணின் குரூரமான தாகத்தைத் தணிக்க உன் மரணமும் எண்ணிக்கையில் சேர்ந்ததா?

நாடறிந்த ஒரு சிறியதந்தை, நாடுபோற்றக்கூடிய தன் பெறுமகனுக்கு இரங்கலுரை எண்ணி, அஞ்சலி செலுத்தும் துர்ப்பாக்கியநிலை வேறு எவருக்கும் ஏற்பட்டிருக்காது. ஆம், நீ நாடுபோற்றக்கூடிய அரியபுத்திரனாக விசுவரூபம் எடுத்திருக்க வேண்டியவன். உன் தந்தை இந்தமண்ணின் விடுதலைக்குச் சாத்வீகமே சரியான மார்க்கமெனக் கருதிச் செயற்பட்டு, ஏமாந்து இருக்கும் நிலையில், இம்மண்ணின் மலர்ச்சிக்கு உன் தந்தை காட்டிய பாதை சரியான தடமன்றென நீ கருதி, வரித்துக் கொண்ட இலட்சியப் பாதையின் பயங்கரக் குழியொன்றை உன் மரணம் நிரவிவிட்டது. உன் தடத்தைப் பின்பற்றுவோருக்கு, உன்மரணம் எச்சரிக்கையன்று; விடியலுக்கு வழிசுட்டும் எழுச்சிப் படிக்கல்.

நீ உடல் வளர்ச்சியில் இளைஞன். ஆணழகன். ஆனால், உள்ளத்தில் உன்னைப்போலக் குழந்தை வேறெவருமில்லை. உன் ஆணித்தரமான கருத்துக்களை நீ எடுத்துக்கூறும்போது, உன் வார்த்தைகளிடையே தவழும் மழலை கலந்த இனிய சொற்களின் முன் நான் என்னை இழப்பதுண்டு. மாணவருல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிற்கு நீ தலைவனுக இருந்தாய். தலைமைத்துவத்தின் ஆளு மைக்கு இலக்கணமாக இருந்தாய். ஆனுல், என்வீட்டில் உன் சின்னஞ்சிறு தங்கை ஹம்சாவுடன் விளையாடும்போது, நீ சின்னஞ்சிறு பிள்ளையாகி விடுவாய். நிலத்தில் நின்று விண் ணைத் தொடும் இலட்சியம் உன் விளையாட்டிலும் இருந்தது. 'அந்தக் கூரையை தொடுங்க பார்ப்பம் அண்ணு' என்ற உன் தங்கையின் சவாலுக்கு நீ உட்பட்டு, கூரை முகட்டைத் தொடக் குதித்தபோது, உன் முயற்சியின் திறன் தெரிந்தது. உன் தங்கையை மகிழ்விக்க வேண்டுமென்ற பாச உந்தல் தெரிந்தது.

ஒரு கட்டத்தில் உன் தந்தையின், என் அண்ணரின், புகழ் சார்ந்த பெயரைக் கூறி, உறவினர்கள் ஏனையோருக்கு அறி முகமாயினர். பின்னெரு கட்டத்தில் அந்நிலைமாறி, 'இவர் மதியின் அப்பா! இவர் மதியின் சித்தப்பா' என்று உன்பெய ரின் புகழின் பின்னுல், ஒதுங்க வேண்டிய மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள் உச்சமடைய வேண்டிய வேளையில் நீ இந்தப் பாவ மண்ணின் பிடியிலிருந்தும், எம் பாசப் பிணைப்புகளிலிருந்தும் விடைபெற்றுச் சென்றுவிட்ட கொடுமை ஏன் நிகழ்ந்தது?

'விடுதலை என்பது தானுகக் கனிந்து விழும் பழமன்று; சித்தப்பா! அது தியாகப் போராட்டங்களின் விளைவாகத் தரப்பட வைக்கும் இலட்சியம்!' என்ருய்; மரணங்களில் வாழ்வோரின் வரிசையில் உன் கல்லறையும் ஒன்ருகிவிட்டது!

மதி, நீ எங்கள் அனைவரிலும் பார்க்க எவ்வளவு உயர்ந் தவன் என்பதை நான் புரிந்துகொண்ட சம்பவம் நினைவுக்கு வருகிறது. நீ சாதாரணமான மனிதனல்லன்; தனித்துவமா னவன் என்பதற்கு அச்சிறு சம்பவமே உதாரணம். ஒரு வயோ திபரை உன் சயிக்கிளில் ஏற்றிக்கொண்டு, ஏழாலையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் உன்னைக் கண்டேன். அன்று பின்னேரம் வீட்டிற்கு வந்தபோது, 'யார் அவர்?'' எனக் கேட்டேன். ''எவர்?'' என்ருய். ''நீ சயிக்கிளில் ஏற்றிவந்த வர்'' என்றேன். ''எனக்கு ஆரென்று தெரியாது. பஸ்சுக்காக காத்திருந்தார், சும்மா வாறு சயிக்கிலிலதானே என்று ஏற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தேன், சித்தப்பா!" என்று நீ சிரித்தாய். "இப்படித்தானே எப்பவுமா?" என்று வியப்புடன் கேட்டேன். விடை உன் சிரிப்புத்தான்.

நல்லவர்களுக்கு இந்த மண் தரும் பரிசு அற்பாயுசு தான், மகனே! நல்ல மனங்கொண்டோரை இந்தப் பூமித்தாய் தன்னுள் புதைத்துக்கொள்கிறாள். இந்த மண்ணில் எங்களுக்குக் கிட்டாத அமைதியை, சாந்தியை, சமாதானத்தை, மரணபயமற்ற நிம்மதியான வாழ்வை அந்த உலகத்திலாவது எமக்கு ஏற்படுத்தித் தருவதற்காகத் தான் நீ முன் சென்றனையோ?

எதிலும் துடிப்பு; அவசரம். மாடிப்படிகளில் ஏறும்போது கூட இரண்டிரண்டு படிகளாகவே கடப்பாய்! உன் மரணத்தில் கூடவா, அந்த அவசரம்?

விண்ணிலிருந்து தேவதூதர்கள்தாம் வருவார்களாம். ஆனால் விண்ணிலிருந்து சாத்தான்களே ஹெலியில் வந்தார்கள். தேவதூதர்கள் மலர்களைத் தூவி ஆசிர்வதிப்பார்களாம். ஆனால், தர்மம் வளர்ந்த, சத்தியம் நிலைத்த பாரதத்திலிருந்து வந்தவர்கள், ஷெல்களையும் குண்டுகளையும் தாம் தூவினார்கள்! தூவிய துகளிலொன்று, மரணத்தில்கூட, உன் எழிற் புன்னகையை நீக்கிவிட முடியவில்லை! உன் இலட்சியங்களின் வைராக்கியத்தை முகக் கமலத்திலிருந்து எடுத்தழிக்க முடியவில்லை.

நீ அமரன்! ஆனாலும் உன் உயிர் இந்த மண்ணில் மீண்டும் பிறந்து, இனங்காட்டி, புதியதோர் உலகு சமைக்கும் என்ற நம்பிக்கை வித்து என்னிலிருந்து அழியப்போவதில்லை.

உன் சித்தப்பா

செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

இக்குறுநாவலை எழுதுவதற்குக் காரணமாகி, பின்னர் தான் ஆசிரியராகவிருந்த 'அமிர்தகங்கை' யில் தொடராக வெளியிட்ட நண்பர் செம்பியன் செல்வன்,

அட்டைப்பட நிழற்படத்தை கலாபூர்வமாகச் சிறைபிடித்துத் தந்துதவிய பேபி போட்டோ நிர்வாகி,

அட்டைப்பட வடிவத்தை அமைத்த ஓவியர் 'தவம்',

அணிந்துரை தந்து வாழ்த்திய மூத்த எழுத்தாளர் நந்தி,

இந்நூலினை வெளியிடும் யாழ். இலக்கிய வட்டத்தினர்,

ஆகியோர் நன்றிக்குரியோர்!

செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்:

- *யாழ் இலக்கிய வட்ட வெளியீடுகள்:*
  - நந்திக் கடல்
  - ஆச்சி பயணம் போகிறாள்
  - அக்கினிக் குஞ்சு
- *வீரகேசரி வெளியீடுகள்:*
  - வாடைக் காற்று
  - பிரளயம்
  - இரவின் முடிவு
  - காட்டாறு
  - கங்கைக்கரையோரம்
  - கனவுகள், கற்பனைகள், ஆசைகள்
- *சிரித்திரன் வெளியீடுகள்:*
  - அலைகடல்தான் ஓயாதோ?
  - சித்திரா பௌர்ணமி
  - முற்றத்து ஒற்றைப் பனை
  - இதயமே அமைதி கொள்
  - நடந்தாய் வாழி வழுக்கையாறு
- *மாணிக்கம் பிரசுரம்:*
  - கொத்தியின் காதல்
- *ரேகா வெளியீடு:*
  - செங்கை ஆழியான் கதைகள்
- *வரதர் வெளியீடு:*
  - யானை
- *சுஜாதா பப்ளிக்கேஷன்ஸ்:*
  - காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
- *நியூ செஞ்சரி புக் ஹவுஸ் வெளியீடு சென்னை:*
  - ஒரு மைய வட்டங்கள்
- *ரஜனி வெளியீடுகள்:*
  - கிடுகுவேலி
  - ஓ, அந்த அழகிய பழைய உலகம்
- *மீரா வெளியீடு:*
  - மழைக்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீம்தரிகிட தித்தோம்

## 1

**1956** மே, 1. அதிகாலை 5 மணி, கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்குள், தனது நீண்ட பயணத்தை முடித்துக்கொள்ளும் ஆவலுடன், யாழ்ப்பாணம் மெயில் றெயின் நுழைந்தது. தூங்கி வழிந்து கொண்டிருந்த புகையிரத நிலையம், மெயில் றெயினின் வருகை ஒலியால், அலறியடித்தபடி விழித்துக் கொண்டது. புகையிரத நிலைய உத்தியோகத்தர்களும் 'போர்ட்டர்களு'ம் சுறுசுறுப்பானார்கள்.

யாழ்ப்பாணத்தில் முதல்நாள் மாலை ஏறி, இரவு முழுவதும் தூங்கியும் தூங்காமலும் பயணம் செய்து வந்த பிரயாணக்களைப்பு, மெயில் றெயினிலிருந்து இறங்கிய பயணிகளில் நன்கு தெரிந்தது.

மூன்றாம் வகுப்புக் 'கொம்பாட்மென்ற்' ஒன்றிலிருந்து, சுரேந்திரன் அவசரமாகப் 'பிளாற்போமி'ல் குதித்தான். தோளில் தொங்கிய 'றவலிங்பாக்'குடன் வெளியேறும் வாசலை நோக்கி விரைவாக நடந்தான் அவனுக்கு இருபத்திமூன்று வயதிருக்கும். உயர்ந்த சிவந்த இளைஞன். நோஞ்சலும் பருமனுமல்லாத உடல்வாகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய முகத்தில் பயணக்களைப்பையும் மீறி ஒருவகை அவசரமும் ஆவலும் தெரிந்தது.

''சோமாவை உடன் சந்திக்க வேண்டும்.''

அவள் நினைவு அவனுக்கு, அந்த அதிகாலைக் குளிரிலும் இதமான வெப்பத்தை உடலில் தந்தது. உடலில் மெல்லிய ஒரு கொதிப்பு. ,வள் அவனுக்காகக் காத்திருப்பாள். அவனுடைய மூன்று நாள் பிரிவைக் கூட அவளால் தாங்கிக்கொள்ள முடியாது.

அவனும் யாழ்ப்பாணம் செல்ல விரும்பி இருக்கவில்லை. மேதினத்திற்கு முன் வந்த வார இறுதி விடுமுறையை அவளுடன் கழிக்கவே அவன் திட்டமிட்டிருந்தான் அதனுல் சோமா கூட அம்பலாங்கொடையிலுள்ள தனது கிராமத்திற்குச் செல்லாது, கொழும்பிலேயே தங்கியிருந்தாள்.

இருந்தாற் போல யாழ்ப்பாணத்திலிருந்து தந்தியொன்று சேர்ந்தது.

'பெரிய ஐயா காலமாகிவிட்டார். உடன் வரவும் ...குமாரசாமி'.

அவனுடைய அண்ணன் குமாரசாமி, தந்தி கொடுத்திருந்தார். தவருது சென்று கலந்து கொள்ள வேண்டிய மரணச் சடங்கு. அவன் மீது அன்பைச் சொரிந்தவரின் இறுதி யாத்திரையில் அவன் கலந்து கொண்டே தீர வேண்டும்.

விபரமறிந்த சோமாவின் முகம் வாடியது. எனினும், அவள் அவனைத் தடுக்கவில்லை.

''போய் வாருங்கள், சுரேன்.''

''நீயும் கிராமத்துக்குப் போய் வாயேன் சோமா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நா மம யன்ன பகாய்... மாட்டேன், நான் போகவில்லை. இங்கு வேலையிருப்பதாக அம்மேக்கு எழுதிவிட்டேன். நீங்கள் கவலைப்படாது போய்வாருங்கள்...''

ஏமாற்றம் முகத்தில் 'பளீரெ'னத் தெரிந்தது. அவனை அவளால் ஏறிட்டுப்பார்க்க முடியவில்லை. கலங்கிவிடுமாப்போல விழிகள் தத்தளித்தன. அப்படியே அவனைத் தன்னுடன் வாரி அணைத்தும் அவன் மார்பில் முகத்தைப் புதைத்து, விழிகளில் தளும்பிய நீரை மறைத்துக் கொண்டாள்.

''மே டே காலை நிச்சயம் வந்துவிடுவேன் சோமா...''

சொல்லியபடியே வந்துவிட்டான். அவன் வீட்டில், அவனை நின்று போகுமாறு அனைவரும் மறித்தனர்.

''வந்தனி ரெண்டுநாள் நிண்டிட்டுத் தான் போவன். நல்லாமெலிஞ்சும்போனாய்'' என்று அம்மா வேண்டினாள்.

''என்ன அவசரம், தம்பி. நாளைக்கும் விடுமுறை தானே? நாளைக்குப் போகலாம் தானே...?'' என்று அக்கா மறித்தாள்.

எல்லாருக்கும் ஒவ்வொரு காரணத்தைக் கூறி, மெயில் ஏறுவதற்குள் போதும் போது மென்றாகிவிட்டது.

கல்கிசை பஸ்ஸில் தாவி ஏறிக்கொண்டான்.

''பம்பலப்பிட்டி எக்காய்..''

பாராளுமன்றக் கட்டிடத்தைக் கடந்த போது, அவனுக்கு பஸ்சில் இருப்பதற்கு இடம் கிடைத்தது.

அதிகாலையிலேயே கொழும்பு நகர் கலகலப்புப் பெறத் தொடங்கிவிட்டது. நகரத்தைநோக்கி வாகனங்கள் வரத் தொடங்கியிருந்தன. வர்த்தக நிலையங்கள் சில திறக்கப் பட்டிருந்தன.

பஸ்சின் யன்னலூடாக வெளியே நோக்கும் போது, காலி வீதியின் ஒருபக்கம் தெளிவாகத் தெரிந்தது. வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர் மதில்களில், நடந்து முடிந்து போன தேர்தல் பிரச்சார விளம்பரங்கள் அழிந்து போகாது தெரிந்தன. பலவற்றில் இன்று ஆட்சியைப் பொறுப்பேற்றிருக்கும் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் படம் சிரித்துக் கொண்டிருந்தது. அவன் ஐக்கிய தேசியக் கட்சிதான் ஆட்சியைக் கைப்பற்றுமெனத் தெர்தல் காலத்தில் நம்பியிருந்தான்.

'இருபத்திநான்கு மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன்' என்ற பண்டாரநாயக்கவின் தேர்தல் வாக்குறுதிக்குச் சிங்கள மக்கள் தலைசாய்த்து விட்டார்கள். அதனால் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவ நேர்ந்துவிட்டது. மக்களின் உணர்ச்சிகளை வெகுவேகமாகத் தட்டியெழுப்ப இன, மொழி, மத உணர்வுகள் ஏற்ற ஆயுதங்களாகும். இந்த ஆயுதங்கள் சிங்களப் பிரதேசங்களில் மட்டுமன்றி, தமிழ்ப் பிரதேசங்களிலும் தேர்தல் காலங்களில் பயன்படுத்தப்பட்டன.

'தமிழுக்குச் சம அந்தஸ்து. தமிழினத்தக்குச் சமஷ்டி ஆட்சி' என்ற தேர்தல் வாக்குறுதிப் பாணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி முன் வைத்து, தமிழ்ப் பிரதேசப் பதினறு தொகுதிகளில் பதினென்கில் போட்டியிட்டு, பத்துத் தொகுதிகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

அவனுடைய தமையன் குமாரசாமி, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முக்கிய அங்கத்தவர், பிரச்சாரப் பேச்சாளர். அதனால், அவனுக்கும் அரசியலில் ஈடுபாடிருக்கிறது.

இனத்தையும் மொழியையும் மதத்தையும் அரசியல் வெற்றிக்கான தேர்தல் காய்களாகப் பயன்படுத்துவதை அவன் அறவே வெறுத்தான். பாராளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்ற மக்களின் மூலாதார உணர்ச்சிகளையா தட்டிவிட வேண்டும்? சமூகநலனைப் பாதிக்கும். வறுமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையின்மை என்பனவற்றைத் தீர்க்கும் மார்க்கங்களை முன்வைத்து, அரசியலில் போட்டியிடக்கூடாதா?

பஸ்குலுக்கலுடன் ஒரு தரிப்பில், நின்று புறப்பட்டது. கொள்ளுப்பிட்டியைப் பஸ், தாண்டிக் கொண்டிருப்பதை உணர்ந்து தன்னிருக்கையை விட்டு எழுந்திருந்தான்.

''இஸ்சரு ஹோல்லெக்க பயினவா...'' என்றான். 'விடுதிக்குப் போய் குளித்துவிட்டு, சோமாவிடம் ஓடிச் செல்ல வேண்டும்.''

## 2

கடற்காற்று இதமாக வீசியது. விடுதியிலிருந்து பார்க்கும் போது, கடல் பரப்பும் அலையெறிவும் தெளிவாகத் தெரிந்தன. கடற்கரையோரமாக கரையோரப் புகையிரதப் பாதை அமைந்திருந்தது. அடிக்கடி அந்த இரட்டைப் பாதையில் புகையிரதங்கள் அசுர வேகத்தில் விரைந்து கொண்டிருந்தன. அவற்றின் இரைச்சல் நாகராசனுக்குப் பழக்கப்பட்ட சங்கீதம்.

கரையோரப் பாறைகளில் இரவு படர்வதை எதிர்பார்த்து, களவுச் சுகம்பெற வந்திருக்கும் இளம் 'ஜோடி' கள் காத்திருப்பார்கள். அவர்களில் நிச்சயமாக சுரேந்திரனும் சோமாவும் இருக்கமாட்டார்கள்.

சுரேந்திரன் அவன் அறை நண்பன். இரண்டாண்டுகளாகத்தான் அவர்களுக்கும் பழக்கம். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றார்கள். சுரேந்திரன், கல்வித் திணைக்களத்தில் 'கிளார்க்'காக வேலை செய்து வருகின்றான். அங்குதான் சோமாவதியும் வேலை செய்கிறாள்.

நாகராசன் அரசாங்க உத்தியோகம் பார்ப்பவனல்லன். கொழும்பிலிருந்து வெளி வரும் ஒரு தமிழ்த் தினசரியின் அலுவலக நிருபனாக இருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் அதிகாலை அந்த விடுதியை நடத்துபவர், சுரேந்திரனை அழைத்து வந்தார்.

''மிஸ்டர் நாகராசன், உமது அறையில் இவர் தங்கப் போகிறார், உம் றூம் மேற்றாக...''

அவன் சுரேந்திரனை ஏறிட்டுப் பார்த்தான் கள்ளங்கபடமில்லாத இளைஞனாகப்பட்டது. யாழ்ப்பாணத்துக் கட்டுப்பாட்டு வாழ்வை, கொழும்பு விரைவில் மாற்றி விடும்.

''எனக்கு ஆட்சேபணையில்லை ..''

''நான் இங்கிருப்பது உமக்குச் சிரமமில்லையே?...'' எனச் சுரேந்திரன் கேட்டான். அவன் அவ்வாறு கேட்டது அவன் உள்ளத்தை நெகிழச் செய்துவிட்டது.

அவர்கள் நண்பர்களாகிவிட்டார்கள்.

சோமாவை அவன் காதலிக்கின்ற செய்தியை அறிந்ததும், முதலில் திகைப்படைந்து பின்னர் வாழ்த்தியவன் அவன்தான்.

''அவள் சிங்களப் பெண் சுரேன். அவளை நீ கலியாணம் செய்து கொள்வது எவ்வளவு தூரம் சாத்தியமாகும்? உன் பெற்றோர் இதற்கு ஒருபோதும் சம்மதிக்ககாட்டார்கள்...''

அவன் எதுவும் பேசாது தலையைக் குனிந்தவாறிருந்தான். பின்னர் சொன்னான்.

''அவளை என்னால் பிரிந்து வாழமுடியாது. வாழ்ந்தால் அவளுடன்தான்...''

அவனையறியாமல் உதடுகளில் புன்னகை மலர்ந்தது. அவன் இன்று பாராளுமன்றத்திற்கு நிருபனாகச் சென்றிருந்தான். அங்கு 'சிங்களம் மட்டும் ஆட்சிமொழி' என்ற மசோதா மீதான விவாதம் நடந்தது. இச் சட்டத்தின் மூலம், சிங்கள மக்களையும், தமிழ் பேசும் மக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்து விடுகின்ற இனவாதக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. அங்கு இரண்டு இனங்களும் பிரிவினைச் சக்தியில் பிளவுறத் தொடங்க, இங்கு இரு இன உள்ளங்கள் ஒன்று பட முயல்கின்றன.

அங்கு நடந்த விவாதங்கள் அவனுக்கு நினைவில் வருகின்றன.

காலிமுகத்திடலில் கம்பீரமாக எழுந்து நிற்கும், ஆங்கிலேயக் கட்டிடக் கலையின் திண்மையை வெளிப்படுத்தும், பாராளுமன்றக் கட்டிடத்தின் செய்தியாளர் கலரியில் அவன் அமர்ந்திருந்தான்.

பாராளுமன்றத்தின் இருக்கைகள் நிரம்பியிருந்தன. இலங்கையின் பல்வேறு தேர்தல் தொகுதிகளின் பிரதிநிதிகள், வெற்றிக்களிப்புடன் அங்கு அமர்ந்திருப்பதாக அவனுக்குப்பட்டது. இந்தப் பாராளுமன்றத்தின் கதிரைகளைக் கைப்பற்றுவதற்காகக் கடந்த தேர்தலில், இவர்கள் எவ்வளவு பகீரதப் பிரயத்தனப்பட்டார்கள்? எவ்வளவு வாக்குறுதிகளை மக்கள் முன் சிந்தினார்கள்? அதிகாரம் என்பது அவ்வளவு இனிமையானதா?

சிங்களத்தை ஆட்சிமொழியாக்குவதாகச் சிங்கள் மக்கள் முன் கூறி, அரசாங்கத்தினைக் கைப்பற்றி இருக்கும் மகாஜன எக்சத் பெரமுன என்ற. எம். ஈ. பி. ஆளுங் கட்சி உறுப்பினர்கள் ஒரு வரிசையில் இருந்தார்கள். அவர்களின் தலைவர், இந்த நாட்டின் பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க முன்னணியில் அமர்ந்திருந்தார். இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பே ணி இந்த நாட்டில் ஒரு சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவோம் என வடக்கு, கிழக்கு மக்களுக்கு வாக்களித்து. வாக்குப் பெற்று வந்திருக்கும் சமஷ்டிக் கட்சியினர் எதிர்க்கட்சியினரோடு அமர்ந்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் பலரை அவனுக்குத் தெரியும். நாடறிந்த பெருமக்கள் அவர்கள். தனிப்பெருந் தலைவர் என யாழ்ப்பாண மக்களால் மதிக்கப்படும் ஜி. ஜி. பொன்னம்பலம், வவுனியாச் சிங்கமெனக் கருதப்படும் சி. சுந்தரலிங்கம், மன்னார்ப் பிரதிநிதி வி. ஏ. அழகக்கோன், கொழும்பு மத்தி இரண்டாம் பிரதிநிதி சேர். ராஸிக் பரீத், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஏ. அமிர்தலிங்கம், பருத்தித்துறையின் ஒரேயொரு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதி பி. கந்தையா, கல்முனை எம். பி. கேற் முதலியார் காரியப்பர், மட்டக்களப்பு பிரதிநிதி எஸ். இராஜதுரை, கோப்பாய் கோமான் சி. வன்னியசிங்கம், நூவாண்வெலப் பிரதிநிதி டாக்டர் என். எம். பெரேரா, கொழும்பு மத்தி முதல் பிரதிநிதி பீற்றர்கெனமன், வெள்ளவத்தைப் பிரதிநிதி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, வெலிமடைப் பிரதிநிதி கே. எம். பி. ராஜரத்ன, மூதூர் எம். பி. எம். ஈ. ஏச். முகமட்அலி, ஊர்காவற்றுறைப் பிரதிநிதி வி. ஏ. கந்தையா, பட்டிருப்புப் பிரதிநிதி எஸ். யூ. எதிர்மன்ன சிங்கம், சாவகச்சேரிப் பிரதிநிதி வி. என். நவரத்தினம் ...இன்னும் பலர்.

மேன்மை தங்கிய தேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கம் மீதான விவாதம், பாராளுமன்றப் பிரதிநிதிகளினால் கடும் விமர்சனத்திற்குள்ளாகியது.

''இந்தநாட்டின் சிறுபான்மை மக்கள் இருபத்தைந்து இலட்சம் பேரின் அடிப்படை உரிமைகள் இச்சட்டத்தால் பறிக்கப்படுகின்றது. தமிழ் பேசும் இச்சிறுபான்மை மக்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக்கப்படுகின்றார்கள். அறுபது இலட்சம் சிங்களப் பெரும்பான்மைகள் இதன் மூலம் சிறுபான்மை மக்களின் நல்லெண்ணத்தை இழக்கிறார்கள். இந்த நாடு ஒரு மொழி, ஓரின நாடன்று. இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களும் நீண்ட காலமாக தெளிவான பிரதேச வரையறைக்குள் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றூர்கள்...'' தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வ நாயகம் பாராளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருந் தார்.

இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழரும் சிங்களவருந் தாம், சிங்களக் குடியேற்றம் விஜயனின் வருகையோடு ஆரம்பமாகிறது. விஜயன் கி. மு. 5 ஆம் நூற்றுண்டில் இலங்கைக்கு ஆரியக் குடியேற்றத்தின் முதற் பிரதிநிதியாக வந்தான்.

வவுனியாப் பாராளுமன்றப் பிரதிநிதி சுந்தரலிங்கம் தன் அறிவிலும் அனுபவத்தாலும் பாராளுமன்றத்தைக் கலகலப்பாக்குபவர். அவர் பேச எழுந்த போது பாராளு மன்றம் கலகலத்ததை உணர்ந்தான், நாகராசன்.

''இந்த நாட்டில் மிகப் புராதன காலத்திலிருந்து தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சிங்களவர்கள் இங்கு எப்போது வந்தார்கள் என்பது எமக்குத் தெரியும். தமிழர் எப்போது வந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? எங்களுக்கு இன்னென்றும் தெரியும். கௌதம புத்தர் வந்த போது. இந்த நாட்டில் தமிழர்கள் இருந் தார்கள்...''

சுந்தரலிங்கத்தின் பேச்சினைத் தொடர்ந்து இந்த விடத்தில் பெரும் சிரிப்பு பாராளுமன்றத்தில் நிறைந்தது.

''ஓ... அலட்சியப்படுத்துகிறூர்கள். சபாநாயகர் அவர் களே, கௌரவ பிரதம மந்திரியிலிருந்து கீழ்மட்டம் வரை இது ஒரு வியாதியாகிவிட்டது. எனது நெருங்கிய நண்பர் கௌரவ பிரதம மந்திரிக்கும் தெரியும், புத்தர் வந்தபிறகே இந்த நாட்டிற்கு விஜயன் வந்தான் என்று. ஒல்லாந்த நிலவளவையாளர்கள் பதிந்து வைத்துள்ள குறிப்புகளிலி ருந்து மூன்றுமைல் நீளமான தண்ணி முறிப்புக் குளத்தில் புத்தர் நடந்தார் என்று தெரிகிறது. அவர்கள் நாகரிக மானவர்கள். கதிர்காமக்கந்தனே வழிபட்டார்கள். கதிர் காமக்கடவுள் ஒரு இந்து...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையில் சலசலப்பு எழுந்தது. சில பாராளுமன்ற அங்கத்தவர்கள் எதிர்க்குரல் தந்தார்கள். சுந்தரலிங்கம் அவர்களின் பேச்சில் குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுகளி லுள்ள உண்மையை ஆராயத்தான் வேண்டும், என அவன் எண்ணிக் கொண்டான். வவுனியாப் பிரதிநிதியின் பேச்சுக்கள் மிகவும் சுவையானவை.

யாழ்ப்பாணப் பிரதிநிதி ஜி. ஜீ. பொன்னம்பலம் தனது பேச்சினைத் தமிழில் ஆரம்பித்தார், கம்பீரமான அவரது ஆங்கிலவுரைக்குமுன், அவரது தமிழ்ப்பேச்சுமழைதான்.

''சபாநாயகர் அவர்களே! இன்றைக்கு இந்த ஸ்தானத்தில் எங்களுடைய பாஷையின் நிலவரத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், நான் ஆங்கிலத்தில் பேசுவதற்கு முன்பாக இரண்டு நிமிஷம் எம்முடைய மற்றப் பிரதிநிதிகளுக்கும், பொதுவாகத் தமிழ் பேசும் மக்களுக்கும், சொல்ல வேண்டியது என்னவென்றால், 2500, 3000 ஆண்டு காலமாக இலங்கைத்தீவில் தனிப் பெரும் பாஷையாக விளங்கின, எங்களுடைய தாய்ப்பாஷையை, இந்தத் திட்டம் மூலமாக இலங்கையில் அழிக்கிறதுக்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதாக நான் விளங்குகிறேன் என்பதை பிரதிபலிக்கமாகச் சொல்ல விரும்புகின்றேன். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாங்கள் இந்த சபையில் மாத்திரமல்ல அது சிறிய விஷயம். இலங்கை முழுவதிலும் வெளியிலும் எதிர்ப்போம் என்பதை இச் சபையிலே கூறி, நான் சொல்ல வேண்டியதை ஆங்கிலத்தில் பேசுகிறேன்...''

''கேளுங்கள் கேளுங்கள்'' என வவுனியா பிரதிநிதி குரல்தந்தார்.

விடுதியிலிருந்து கொண்டு யன்னலூடாக அலையெறியும் கடலை அவதானிக்கும் போது அந்த ஒலி இந்த நாட்டில் இன்று எழுந்திருக்கும் இனவாதக் குமுறலாகப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. அமைதியான குளத்தில், விசமிகள் யாரோ கல்லெறிந்து குழப்பிவிட்டதான உணர்வு தோன்றியது. இனந் தெரியாத வேதனை இதயத்தில் படிவதாக நாகராசன் உணர்ந்தான்.

மட்டக்களப்புப் பிரதிநிதி எஸ். இராசதுரை தன் பேச்சில் குறிப்பிட்ட கலக்கத்தின் அர்த்தம் இப்போது புரிந்தது.

''சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய தேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கம், இந்தநாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே என்றுமில்லத பெருங் கவலையையும் கலக்கத்தையும் எதிர் காலம் பற்றிய ஏக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது...'' என மட்டக்களப்புப் பிரதிநிதி குறிப்பிட்டார். அவர் தமிழ் பேசும் மக்களின் இரண்டு ஜீவாதாரப் பிரச்சினைகளை எதிரொலித்தார்:

''கடந்த பல்லாயிரமாண்டுகளாக இந்த நாட்டிலுள்ள சிங்களம் பேசக்கூடிய மக்களும் தமிழ் பேசக்கூடிய மக்களும் அண்ணனும் தம்பியும் போல் இங்கு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அந்தச் சூழ்நிலை மாறிக் கொண்டு வருகின்றது. மொழி ஒரு இனத்தின் விழி. எனவே அவர்களுடைய தாய் மொழியையும், கலை, கலாச்சாரம் ஆகிய வற்றையும் அவர்களுடைய சந்ததியினருக்கும் பாதுகாத்து வைக்கும் உரிமை அவர்களுக்குமுண்டு...'' தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமையை வலியுறுத்திய அவர், தமிழ் மக்களின் பிரதேசவுரிமையையும் வற்புறுத்தினார்: ''பரம்பரை பரம்பரையாகத் தமிழ் பேசும் மக்கள் வாழக்கூடிய பிரதேசங்களில் சிங்களவரை குடியேற்றி, பொருளாதார, கலாச்சார, சமூக நெருக்கடிகளால் தமிழ் பேசும் இனத்தை நசுக்கிவிட முயலும் முன்னைய அரசாங்கத்தின் குடியேற்றத் திட்டத்தில் எதுவித மாற்றமும் தேசாதிபதி குறிப்பிடவில்லை...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற நிருபராகக் கலந்து கொள்வதால், இந்தநாட்டின் வரலாற்று நிகழ்வுகளை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றதோ என அவன் கவலைப்பட்டான். கடல் குமுறி அலையெறிந்தது.

# 3

காலி வீதியின் சீரானதளத்தில் அதிக குலுக்கமின்றி பஸ் சென்று கொண்டிருந்தது. சுரேந்திரனின் தோளில் தலையைச்சாய்த்து, அவன் இடது கரத்தைத் தன் மடி மீதிட்டுப் பற்றிய வாறு சோமாவதி அமர்ந்திருந்தாள்.

''சோமா...'' என்று மெதுவாக அவன் அழைத்தான்.

''ம்...''

''இப்படியே என்றுமிருந்துவிட வேண்டும்...''

அவள் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்துச் சிரிப்பை உதிர்த்தாள். அவள் சிரிக்கும் போது, பற்களின் வரிசை முத்தெனப்பளீரிட்டது. சிவந்த கன்னங்களில் கடும் பொட்டிட்டது போலக் குழிகள் தோன்றின. நெற்றியில் சிலும்பிக் கிடக்கும் கூந்தலை, வலக்கரத்தால் படியவாரி விட்டாள். உயர்த்திய கரத்தின் வளவளப்பும் நிறம், கரத்தில் இருந்த தங்கவளையல்களைப் பழித்தன.

''என்றும் ஒன்ருக இருக்கத்தான், போகின்ரேம், சுரேன்''

''உன் வீட்டார் ஒப்புக் கொள்வார்களோ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் எதுவும் பேசவில்லை. பஸ் யன்னலூடாக வெளியே வெறிக்கப் பார்த்தாள். விழிகள் கலக்கத்துடன் விழித்தன. அவள் பேச்சை மாற்ற விரும்பியவளாக,'' இன்றைக்கும் ஒபிசுக்கு லீவு போட்டு விட்டு, ஊர்சுற்றி யிருக்கிறோம்'' என்றாள்.

''தெகிவளை பயினவாத?...''

அவர்கள் தெகிவளையில் இறங்கினார்கள். சோமாவதி, தெகிவளையிலுள்ள பெண்கள் விடுதியொன்றில் இருக்கிறாள்.

''நீங்கள் போங்கள்... சுரேன் நான் போவேன்''

''இல்லை சோமா, உன்னை உன் விடுதியில் கொண்டு வந்து விட்டு விட்டுப் போகின்றேன்...''

அவர்கள் மெதுவாக நடந்து விடுதியை அடைந்தார்கள். விடுதியினுள் நுழைந்த போது ஹோலில் இருவர் அமர்ந்திருந்தார்கள். சோமாவதி நெருப்பை மிதித்தவள் போலத் துடித்துப் போனாள்.

''அம்மே.''

சோமாவின் தாயும், தமையனும் அவர்கள், இருவரையும் கவலையுடன் ஏறிட்டுப்பார்த்தனர்.

## 4

மாலைப் பொழுது இரவுக்கு அழைப்பு விடுகின்ற வேளையில், நாகராசன் விடுதிக்குத் திரும்பி வந்தான். அறைக்கதவைத் திறந்தபோது, அவனுக்கு அங்கு பெரும் வியப்புக் காத்திருந்தது.

கட்டிலில் சுரேந்திரன் படுத்திருந்தான். வழக்கமாக அந்த வேளையில் அவன் அறையில் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமாவோடு கடற்கரை வெண்மணலில் கதைபேசிக் கொண்டிருப்பான். இருள் கனத்து மூடியபின்னரே, அறைக்குத் திரும்பி வருவான். இனிய மாலைப்பொழுதை அவமே விட்டுவிட்டு, கட்டிலில் அவன் கிடப்பதைக் காண நாகராசனுக்கு முதலில் வியப்பும், பின்னர் கவலையும் ஏற்பட்டன.

சுரேந்திரன் நித்திரையில் ஆழ்ந்திருப்பவனாகத் தெரியவில்லை; கண்களை மூடியபடி பலத்த சிந்தனை வயப்பட்டவனாகப் படுத்திருப்பவனாகத் தோன்றியது. நாகராசன் அறைக்கதவைத் திறந்து உள்ளே வந்ததைக் கூட அவன் உணர்ந்தவனாகத் தெரியவில்லை.

''ஹாய், சுரேன்...''

இரண்டு தடவைகள் அழைத்தபின்னரே சுரேந்திரன் கண்களை விழித்துப்பார்த்தான். விழிகளில் ஆழ்ந்த கவலை மண்டிக்கிடந்தது.

''எப்போது வந்தாய்?''

''என்னடா நடந்தது?'' என்று நாகராசன் கேட்டபடி, கடற்புற யன்னல்களைத் திறந்து விட்டான். தூரத்தில் அலையெறியும் கடற்பரப்பைத் தழுவிய காற்று, அறைக்குள் நுழைந்து நிறைத்தது.

''நீ எதைக் கேட்கிறாய்?''

நாகராசன் நண்பனைத் திரும்பிப்பார்த்தான்.

''நீ இன்று வெளியில் செல்லவில்லை? சோமாவிடம் போகவில்லை?...''

சுரேந்திரன் கட்டிலில் எழுந்து அமர்ந்து கொண்டான். அவன் கண்கள் யன்னலூடாகக் கடலில் மேவும் அலை நுனி நுரைகளைப்பார்க்க முயன்றன. முகத்தை வலக்கரத்தால் அழுத்தித் துடைத்துக் கொண்டான். பின்னர் மெதுவாகச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சோமாவின் தாயும் தமையனும் வந்திருக்கிறார்கள்...''

''ஏன் இருந்தாற்போல...?''

''சோமாவின் தமையன் விஜயபாலவிற்குத் துறைமுகத்தில வேலை கிடைச்சிருக்காம்... அவன் இன்றிலிருந்து வேலைக்குச் சேர்ந்திட்டான். அவனும் இனிக் கொழும்பில் தான் இருப்பான்...''

''அதுக்கென்ன, சுரேன்? சோமா இன்று சந்தோருக்கு வரவில்லையா?...''

''வந்தாள் மிகுந்த கவலையோடு காணப்பட்டாள். நாகு, நேற்றுமாலை அவளை அவள் ஹொஸ்ரலில் விட்டு விட்டு வருவதற்காகப் போனேன். சோமாவின் தாயிடமும் தமையனிடமும் இருவரும் அகப்பட்டுக் கொண்டோம். என் முன்னிலையில் எதுவும் நடக்கவில்லை... நான் தயக்கத்துடன் திரும்பி வந்துவிட்டேன். அவர்களைக் கண்டதும் ஓரளவு பயத்துடன் ஓடி வந்துவிட்டேன் போலத் தான் எனக்குப் படுகின்றது...''

''பிறகு...?'' என நாகராசன் கவலையோடு கேட்டான்.

''சோமாவை அவர்கள் ஏசினார்களாம். கண்டித்தார்களாம். 'உனக்கென்ன விசரா...? போயும் போயும் ஒரு 'தெமிளு' வைக் காதலித்தாயே? இது சரிவரக்கூடிய விசயம் தானா?' என்றெல்லாம் ஏசியிருக்கிறார்கள். தாய் பெருங் குரலில் அழுதிருக்கிறாள். தமையன் கோபத்தோடு ஏசியிருக்கிறான். ஹொஸ்டல் முழுவதும் கூடிவிட்டதாம்.''

''சோமா சொன்னாளா?''

''இன்னும் சொன்னாள். தமிழனை அதுவும் 'யாப்பனே மினிசு'வை நம்பக்கூடாதாம். என்னோடு பேசுவதை, திரிவதை இனி நிறுத்திக் கொள்ள வேண்டுமாம். தமையனுக்

கும் இங்கு வேலைகிடைத்து விட்டதால், ஒரு சிறு வீடு எடுத்துக்கொண்டு, எல்லாரும் கொழும்பில் குடியேறப் போகிருர்களாம்..''

''இன்று அதனுல் தான் சோமாவோடு நீ வெளியில் போகவில்லையா...?''

''சோமாவின் அம்மா, ஹொஸ்டலில் நிக்கிருவாம்... அதனுல் சோமாவால் இன்று வெளியில் வரமுடியவில்லை''

''இதோ பார், சுரேன்! காதல் என்பது எவ்வளவுக் கெவ்வளவு இனிமையானதோ அவ்வளவுக்கவ்வளவு கவலையையும் தரக்கூடியது! இனித்தான் போராட்டமே இருக்கிறது. சொந்த மச்சாளைக் காதலித்தாலே, கொதித்தெழும் யாழ்ப்பாணப் பெற்ருேர், நீ ஒரு சிங்களப் பெண்ணைக் காதலிப்பதை அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். சோமாவின் பக்கத்திலும் அப்படித்தான். இரு இனங்கள் கலியாணத்தில் சங்கமிப்பதென்பது இன்று மிகச் சிரமமானது. நடந்து முடிந்துபோன தேர்தல், இரு சமூகங்களிடையேயும் பெரும் பிளவைத் தோற்றுவித்துள்ளது...''

''அரசியலையும் எங்கள் தூய்மையான காதலையும் இணைக்காதை...''

''அப்படிச் சொல்லமுடியாது, சுரேன்.'' என்ருன் நாகராசன்: ''அரசியல்வாதிகளால் விதைக்கப்படுகின்ற நச்சுவிதைகள் மக்களில் தான் அறுவடை செய்யப்படும். பாராளு மன்றத்திற்கு ஒரு தடவை நீ பார்வையாளனுக வந்திருந்தால், தெரிந்திருக்கும். மக்களின் தலைவிதியை சனநாயகம் என்ற பெயரால், அரசியல்வாதிகள் எவ்வளவு தூரம் நிர்ணயிக்கிருர்கள் என்பது! அரசியல் இலாபத்திற்காக வகுப்புவாதக் கருத்துக்கள் அரசியல் வாதிகளின் வாய்களிலிருந்து எவ்வளவு தூரம் வெளிவருகின்றன என்பது புரியும்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகராசன், யன்னலூடாக ஆர்ப்பரிக்கும் கடலைப் பார்த்தான். செந்நிறமான மேலை வானில் ஒளிப்பந்தாகச் சூரியன் சரிந்து கொண்டிருந்தான்.

''நாகராசன், போன் கோல்...'' என எவரோ அழைத் தார்கள். நாகராசன் அவசரமாகச் சென்று, தொலை பேசியில் பேசிவிட்டுத் திரும்பி வந்தான்.

''சுரேன்... தமிழரசுக்கட்சித் தலைவர் வீட்டில், 7-30 மணிக்கு பத்திரிகையாளர்கள் கூடுகிறார்கள். தலைவர் செல்வநாயகம் முக்கியமான செய்தி ஒன்றினை வெளியிடு கிறாராம்... பிரதம ஆசிரியர் போன் பண்ணினார். என்னை அதில் கலந்து கொள்ளட்டாம். இப்பவே நேரம் ஏழு...''

நாகராசன் அவசரம் அவசரமாக உடையை மாற்றிக் கொண்டு புறப்பட்டான்.

# 5

''தமிழ்பேசும் மக்கள் பிரச்சினைகள் நிறைந்த ஒரு காலகட்டத்தில், இன்று பிரவேசிக்கின்றார்கள். சிங்களம் அரசகரும மொழியாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் தமிழ்பேசும் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கும். இச்சட்டத்திற்கு எதிராக ஒரு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்...'' தமிழரசுக்கட்சித் தலைவர் செல்வநாயகம், மென்மையான குரலில் செய்தியாளர்களைப் பார்த்துக் கூறினார். அவருடன் கோப்பாய் வன்னியசிங்கம், மன்னார் அழகக்கோன், வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம், சாவகச்சேரி நவரெத்தினம் ஆகியோரும் அமர்ந்திருந்த னர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகை கள் பலவற்றின் செய்தி நிருபர்கள், அங்கு சமூகமளித் திருந்தனர். அவர்களுள் ஒருவனாக நாகராசன் அமர்ந்திருந் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் இந்த நாட்டைப் பிளவுபடுத்தி இரண்டு நாடுகளாக்கப் பார்க்கிறீர்கள் என்று ஒரு அபிப்பிராயம் மக்களிடையே நிலவுகிறது'' எனச் சிங்கள நிருபர் ஒருவர் கேட்டார்.

செல்வநாயகத்தின் உதடுகளில் புன்முறுவல் படர்ந்தது.

''சமஷ்டி ஆட்சியின் தீர்வு, நாட்டைப் பிரிப்பது தான் என நினைப்பது தவறு. அது நாட்டுப் பிரிவினையன்று; அதிகாரப்பரவலாக்கல் ஆகும். இனரீதியாக அல்லது மொழிரீதியாகச் சிறுபான்மையாக இருக்கும் மக்களின் பயத்தைப் போக்கி, ஐக்கியத்தைப் பேணும் ஒரு அமைப்புத்தான் சமஷ்டி ஆட்சி! பல்லின, பல மொழி மக்கள் வாழும் நாடுகளில் சமஷ்டியே தீர்வான ஆட்சியாக இருக்கின்றது... சமஷ்டி என்பது பிரிவினையன்று...'' என்றார், செல்வா.

''ஒற்றையாட்சியின் கீழ் ஒன்றுபட்டு இரு சமூகத்தவர்களும் வாழ முடியாதா?...'' என ஒரு நிருபர் கேட்டார்.

''அக்கட்டம் இன்றைய நிலைமையில் தாண்டிவிட்டதென நினைக்கின்றேன். 1947 இல், மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எட்டுப்பேர் பாராளுமன்றத்தில் இருந்தார்கள். சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் கூடி, நிறைவேற்றிய முதல் காரியம், இந்தியத் தமிழ்மக்களின் பிரஜாவுரிமையைப் பறித்ததன் மூலம், அவர்களை நாடற்றவர்களாக்கி, பாராளுமன்றத்தில் அவர்களுக்கு இருந்த பிரதிநிதித்துவத்தைப் பறித்ததாகும். இது பெரும் பான்மை மக்களைச் சந்தேகத்தோடு பார்க்க வைத்த முதல் நிகழ்வு! வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களாக இருக்கின்றன. அப்பிரதேசங்களில், பதவியா, கல்லோயா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லே, கந்தளாய் போன்ற குடியேற்றங்கள் மூலம், சிங்கள் மக்களேக் குடியேற்றி, தமிழ் பேசும் மக்களைப் பிரதேச சிறுபான்மையாக்கும் முயற்சி, பெரும்பான்மை மக்களைச் சந்தேகத்தோடு பார்க்க வைத்த இரண்டாவது நிகழ்வு! இன்று சிங்களம் மட்டும் அரசகருமமொழி என்ற சட்டத்தின் மூலம், தமிழ்பேசும் மக்களின் சந்தேகத்தை நியாயப்படுத்தும் மூன்ருவது நிகழ்வு நிறைவேறப் போகின்றது. தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள், பாரம்பரியப் பிரதேசம், மொழி என்பவற்றைக் காப்பாற்றுவதற்கு ஒரேயொரு சிறந்த வழி சமஷ்டி ஆட்சி தான்... அதனுல் தான் இந்த முடிவுக்கு வந்தோம்...''

''தமிழ் மக்கள் சமஷ்டி ஆட்சியை விரும்பலாம் ஆனல், சிங்கள் மக்களிடையே அதற்கு ஆதரவாக மன மாற்றம் நிகழவில்லேயே?'' என இன்னெரு சிங்கள நிருபர் கேள்வியை எழுப்பினுர்.

''அப்படிச் சொல்ல முடியாது... சிங்கள மக்களில் பலர் நமது கட்சியின் நியாய பூர்வமான சமஷ்டிக் கோரிக்கையைப் புரிந்திருக்கின்ருர்கள். கடந்த தேர்தலின் போது ஹற்றனைச் சேர்ந்த வணசிங்க என்ற சிங்கள அன்பர், எங்களது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொண்டார். அவர் எங்களது சமஷ்டிக் கோரிக்கையை ஆதரித்துப் பேசினுர். சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் தான் நேசிப்பதிலும் பார்க்க, இந்த நாட்டை நேசிப்பதனுல் தான், நான் சமஷ்டி அமைப்பை ஆதரித்துப் பேசுகிறேன். இனத்தாலும் மொழியாலும் வேறுபட்ட இரு சாராரும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்குச் சமஷ்டித் தத்துவமே சிறந்தது, என அந்தச் சிங்கள அன்பர் குறிப்பிட்டார்...''

''இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்று இன்னமும் எட்டு ஆண்டுகள் கூட முடியவில்லே. அதற்குள் இப்படியொரு இடைவெளி சிங்கள மக்களுக்கும் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்குமிடையில் வந்திருக்கக் கூடாது... சுதந்திரம் பெறுவதற்கான போராட்டத்தில் ஜோர்ஜ் வோல்ஸ், சார்ள்ஸ்லோறேன்ஸ், அருணாசலம், எவ்ப். ஆர். சேனநாயக்க, இராமநாதன், டி. எஸ். சேனநாயக்க, ஜேமஸ் பீரிஸ், டி. பி. ஜயதிலக போன்ற பல பெருமக்களும் சேர்ந்து போராடிப் பெற்ருர்கள். சுதந்திரம் மலர்ந்து எட்டு ஆண்டுகள். கூடக் கழியவில்லை. அதற்குள் பெரும்பான்மை மக்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கு மிடையில் மன வேற்றுமைகள் உருவாகிவிட்டமை துரதிர்ஷ்டவசமானது'' என்ருர் மன்னார்ப்பிரதிநிதி அழகக்கோன்.

நிருபர்களுக்குத் தேநீர் வழங்கப்பட்டது. தேநீர் அருந்தியவாறு, ஒரு சிங்கள நிருபர் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி அமிர்தலிங்கத்திடம் கேட்டார்.

''மே 4 ஆம் திகதி, பாராளுமன்ற விவாதத்தில், ஒரு கட்டத்தில் நீங்கள் சொன்னீர்கள்... வீ ஆர் கியர் நொற் ரு டிக்ளெயா வார். தற் ஸ்ரேஜ் வில் கம்... சேர் டின்லி இற் வில்கம்... நாங்கள் இங்கு வந்திருப்பது யுத்தப்பிரகடனம் செய்வதற்காகவல்ல. அந்த நிலை வரும்; நிச்சயமாக வரும், என்றீர்கள். அதன் அர்த்தம்...?''

''நமது நாட்டின் அரசியல் போக்கு அப்படிக் கூற வைக்கிறது. அப்படியொரு நிலை வரக்கூடாது என்றே விரும்புகின்றேன்''

''யூன் 5 ஆம் திகதி, சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்ற சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் படப் போகின்றது. அதில் உங்கள் நிலை என்ன?'' என்று நாகராசன் முதல் தடவையாகக் கேட்டான்.

''அதைக் கூறத்தான் உங்களை இங்கு அழைத்திருக்கின்ேறாம்'' என்ருர் கோப்பாய் பிரதிநிதி வன்னியசிங்கம். அவர் தொடர்ந்து பேசாது, தலைவர் செல்வநாயகத்தைப் பார்த்தார். தலைவர் மெதுவாகக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜூன் 5 ஆம் திகதி, தமிழ்பேசும் மக்களின் மொழி யுரிமை பறிக்கப்படும் துயர நாள். அன்று எனது கட்சி யைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், வேறு 200 கட்சித் தொண்டர்களும் இணைந்து, பாராளுமன்றக் கட்டி டத்தின் மேற்கு வாயிலின் முன் அமர்ந்து அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்திருக்கின் ரேம். பாராளுமன்றத்தில் அச்சட்டம் நிறைவேறும்போது, எமது எதிர்ப்பை சாத்வீகமாகத் தெரிவிப்பதற்கு இதனை ஒரு மார்க்கமாக எடுத்துள்ளோம்."

## 6

இரவு மணி 7-45.

சோமாவதி, கட்டிலில் துயரத்தோடு படுத்திருந்தாள். அவளுடைய தாயார், அடுத்த அறையில் இருக்கும் ஆசி ரியை ஒருத்தியுடன் பேசிக்கொண்டிருந்தாள். சோமாவின் நினைவுகள், சுரேந்திரனைச் சுற்றிப் படர்ந்தன.

"சோமா... விசிற்றர் போ யூ" யாரோ ஒரு பெண், ஹோலில் இருந்து குரல் தந்தாள். கட்டிலிலி ருந்து விருட்டென எழுந்த சோமா, மாடிப்படிகளில் வேகமாக இறங்கிக் கீழே வந்தாள்.

"சுரேன்... நீங்களா? இந்த நேரத்திலா?"

சுரேந்திரன் ஹோலில் நின்றிருந்தான். நாகராசன் சென்றபின், சுரேந்திரனல் அறையில் இருக்க முடியவில்லை. சோமாவைக் காணவேண்டும் என்ற வெறி, பூதாகார மாய் எழுந்தது. புறப்பட்டு விரைந்து வந்துவிட்டான்.

"சோமா.. உன்னைக் காணமல், பேசாமல் என்னல் இருக்கமுடியவில்லை... விசர் வரும்போல இருக்கிறது! என்னல் முடியாது, சோமா. உன்னேடு பேசாதிருக்க என்னல் முடியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுரேன்... இதென்ன சிறுபிள்ளைமாதிரி? அம்மே இருக்கிறு. போய்விடுங்கள். நாளை ஒபிசில் பேச வாம். பிளீஸ் ''

''சோமா...''

''அம்மே வந்துவிடுவா, சுரேன்! போய் வாருங்கள் ''

''ஒரு பதினைந்து நிமிடமாவது என்னுடன் வெளியில் வா, சோமா...''

''முடியாது சுரேன்..''

மாடியிலிருந்து தாயின் குரல் ஒலித்தது.

''சோமா! சோமா துவ ''

அவள் அவனைக் கவலையோடு ஏறிட்டுப் பார்த்துவிட்டு மாடிப்படிகளில் தடதட வெனப் பாய்ந்து ஏறிச் சென்ருள்.

அவளையே பார்த்தபடி சுரேந்திரன், மரமாக நின்றிருந்தான்.

யாரோ அவன் அருகில் வந்து நின்ருர்கள். அவன் திரும்பிப் பார்த்தான்.

''நீங்கள் கனகசபை அம்மாவின் மகன் சுரேந்திரன் எல்லோ? நான் யசோ. பொன்னம்பல மாஸ்ரரின் மகள் உங்கட ரோட்டுத்தான்... இங்கதான் இருக்கிறன். ரீச் பண்ணுறன் '' என்ருள், அந்தப்பெண்.

## 7

பிலே வீதியில் பஸ் தரித்து நின்றது. கல்வித் திணைக் களத்தில் வேலை செய்யும் அலுவலர்கள் பலர் பஸ்ஸை விட்டுக் கீழிறங்கி, அலுவலகங்களை நோக்கி விரைந்து நடந்தார்கள். சுரேந்திரன் கடைசியாகச் சோர்வுடன் பஸ்ஸை விட்டுக் கீழிறங்கினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றிரவு நிகழ்ந்துவிட்ட, துயர் தரும் பிரிவு ஏற்ப டுத்திவிட்ட ஏக்கத்தின் இருள் உள்ளத்தைவிட்டு இன்னும் விலகவில்லை. இதயத்தைப் பெரும் பாரம் ஒன்று அழுத் துவதாக அவன் உணர்ந்தான்.

'சோமா...'

அலுவலகத்தில் இன்று அவளோடு, மனம் விட்டுப் பேசி ஆறுதலடைய வேண்டும், என உள்ளம் அவாவியது. அந்த எண்ணம் அவன் கால்களுக்கு வலுவூட்ட, திணைக்க ளத்துள் விரைந்து நடந்தான். அலுவலக நேரம் ஆரம் பமாகி விட்டிருந்தும், பலர் கூட்டம் கூட்டமாக ஆங் காங்கு கூடி நின்று காரசாரமாக எதையோ விவாதித் துக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு கூடி நின்றோரில் சிங்கள நண்பர்களே அதிகமாக விருந்தனர். அவன் வேக மாகத் திணைக்களத்துள் நுழைய நடந்தபோது, அவனை அவர்களில் சிலர் வெறுப்புடன் பார்ப்பதாக அவனுக்கு பட்டது.

புதியதொரு உவப்பற்ற சூழலில் நுழைவதாக அவன் உணர்ந்தான். இவர்களுக்கு என்ன நடந்தது?

அவன் தன் அலுவலகப் பிரிவிற்குள் நுழைந்தபோது, எதிரில் அவன் பக்கத்து மேசை நண்பன் ராஜபக்ச வந்தான்.

"குட் மோர்னிங் ராஜபக்ச..." என்றான் அவன். ராஜபக்ச அவன் வணக்கத்திற்கு எதிர் வாழ்த்துக் கூற வில்லை.

"ம்..." என்றபடி அவனைக் கடந்து சென்றான்.

அவனுக்கு வியப்பாகவும் கவலையாகவும் அவனது செயல் பட்டது. அவன் பிரிவில் பதினொருபேர் வேலை பார்த்தார் கள். அப்பிரிவின் பிரதம லிகிதர் சண்முகம்பிள்ளை; ஏனை யோரில் நால்வர் தமிழர்; அறுவர் சிங்களவர். சோமா அப்பிரிவின் 'ரைப்பிஸ்ற்'

அலுவலக மேசைகள் பல ஆளின்றி வெறிச்சிட்டுக் கிடந்தன. பிரதம லிகிதரும், நித்தியானந்தம் என்ற லிகிதரும் மட்டும் அந்தப் பிரிவில் அவ்வேளை இருந்தனர். அவன் 'அற்றெண்டன்' றிஜிஸ்ரரில் ஒப்பமிடும்போது, சண்முகம்பிள்ளை சொன்னார்;

''ஏதோ ஒரு பம்லெட்டையும் மேப்பொன்றையும் கொண்டு திரியிறுங்கள். இன்டைக்கு உவங்களின்ர குணங்குறி சரியாகவில்லை. உவங்களோடு நீ வீணாகக் கதை கொடுக்காதை...''

அவன் 'அற்றெண்டன்' றிஜிஸ்ரரில் கையெழுத்திடும் போது, தனக்குப் பரிச்சயமான சோமாவின் ஒப்பம் இருக்கிறதா எனப் பார்த்தான்.

''சோமா இன்டைக்கு லீவு கேட்டு விண்ணப்பித்திருக்கிறுள்...'' என்று கூறி சண்முகம்பிள்ளை மெதுவாகச் சிரித்தார்.

அவன் ஒருகணம் இடிந்துபோனான். என்ன நடந்தது? சுகமில்லையோ?

''இதோ பார், சுரேன்... நீ சோமாவுடன் நட்பு என்பதனுலேயே, இந்த 'பிறுன்சில்', பொறுமையால் பகைமையைச் சம்பாதித்திருக்கிறுய்... உனக்கேன்ராப்பா, இப்படிப் புத்தி போச்சுது?'' என்று சண்முகம்பிள்ளை அவனை உரிமையோடு கண்டித்தார். அவர் வீட்டில், அவரது வயது வந்த குமருகள் இரண்டு கலியாணத்திற்காகக் காத்திருக்கின்றன. 'அருமையான ஒரு பொடியன் கைகழுவிப் போகிறுனே' என்பதில் அவருக்கு ஓர் ஆதங்கம்.

சுரேந்திரன் எதுவும் பேசாமல், தன் கதிரையில் அமர்ந்து, பைல்களைப் புரட்டத் தொடங்கினுன். மனம் பைல்களில் படியவில்லை. சிந்தையில் கலங்கிய விழிகளோடு, சோமா நிறைந்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் பத்தரை மணி.

''கன்ரீனுக்கு வாறியா, சுரேன்...'' என நித்தியானந்தன் அழைத்தான். காலையில் எதுவும் அவன் சாப்பிடவில்லை. சாப்பிடுவதற்கு மனம் இருக்கவில்லை.

''சரி...'' என்று கதிரையை விட்டு எழுந்தான்.

கன்ரீனுக்குள்ளும் அசாதாரண சூழ்நிலையே நிலவியது. தேநீரை எடுத்துக் கொண்டு ஒதுக்குப்புறமான 'சீற்' ஒன்றில் இருவரும் அமர்ந்தனர்.

''உவன்களுக்கு என்ன நடந்தது?'' என்று சுரேந்திரன் கேட்டான்.

''யூன் 5 ஆம் திகதி தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்யவுள்ளனர், அல்லவா?

''அதுக்கென்ன?...''

,,சாத்வீகமன அந்தப் போராட்டத்தைச் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான போர் என அர்த்தப்படுத்தி, ஒரு 'பம்ளெற்' வெளிவந்துள்ளது. அதுக்கு 'எலாரா—துட்டகைமுனு சமயுத்த' எனப் பெயரிட்டு, வகுப்புவாதத்தைக் கக்கியுள்ளனர்...'' என்று கூறியவாறு, நித்தியானந்தன் தேநீரை அருந்தினான்.

சுரேந்திரன் வியப்போடு, அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

''உன் அண்ணர் குமாரசாமியும் தமிழரசுக் கட்சிப் பேச்சாளர் அல்லோ? அவரும் ஒருவராம்... எழுதியிருந்தார். நீ சொல்வதைப் பார்த்தால் ஏதாவது பிரச்சினைகள் வரலாம் போலத் தெரியுது. அதென்ன ஏதோ ஒரு 'மாப்' வைத்திருக்கின்றார்களாம்... சி. சி. சொன்னார்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓமோம், ஒரு தேசப்படம் இலங்கைப் படம் தொங்குகிறது, அதில் தமிழரின் பிரதேசங்கள் எனக் காட்டியுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்கள், கண்டி மாவட்டங்கள், கொழும்பு மாவட்டத்தில் சில பகுதிகள் என்பவற்றை நிறந்தீட்டிக் காட்டியுள்ளனர். அப்படத்தைப் பார்த்தால் பெரும் பகுதி தமிழர் பிரதேசமாகக் காட்டப்பட்டுள்ளது. இதுவும் வேணுமென்று ''

அவர்களை நோக்கி ராஜபக்சவும் வேறு மூவரும் நடந்து வந்தனர். ராஜபக்சவின் கரத்தில், அந்த இலங்கைத் தேசப்படம் இருந்தது. அவன் அந்தேசப் படத்தை, அவர்கள் முன் வேகமாக எறிவது போல வைத்தான். அவன் உதடுகள் கோபமாக வார்த்தைகளை உச்சரித்தன.

''திஸ் இஸ் கவ், யூ வோன்ற் ரு டிவைட் தி கன்ரி...'' —[இப்படித் தானே நீங்கள் இந்த நாட்டைப் பிரிக்க விரும்புகிறீர்கள்...]

அவனைக் கவலையோடு பார்ப்பதைத்தவிர வேறொன்றும் அவர்களால் கூறமுடியவில்லை. அரசியல்வாதிகளால் கருத்துக்கள் எவ்வளவு தூரம் திரிவுபடுத்தப்பட்டுள்ளன. சந்தர்ப்ப அரசியல்வாதம் இதுதானோ?

அவர்கள் எழுந்து, தங்கள் அலுவலகப் பிரிவுக்கு வந்தனர்.

''ராஜபக்சவுக்கு இந்த 'மாப்' ஏற்படுத்திய தாக்கத்திலும் பார்க்க, நீயும் சோமாவும் சிநேகிதம் என்பது ஏற்படுத்திய தாக்கம் அதிகம்... அவனுக்குச் சோமாவில் ஒரு கண்... அவனது பிரச்சினை அரசியலல்ல.'' என்றான் நித்தியானந்தம்.

அன்று அரைநாள் லீவு எழுதிக்கொடுத்துவிட்டுச் சுரேந்திரன், அறைக்குத் திரும்பி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோமாவோடு ரெலிபோனில் தொடர்பு கொண்டால் என்ன?" என்ற எண்ணம் எழுந்தது. அவனுடைய ஹொஸ்ரலுக்கு 'போன்' பண்ணினான். அவள் தாயாருடன் கிராமத்துக்குப் போய்விட்டதாகச் செய்தி தெரியவந்தது.

இடி விழுந்தவன் போலானான், சுரேந்திரன்.

## 8

பாராளுமன்ற அங்கத்தவர்கள், பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்காகக் கொழும்புக்கு வரும் வேளைகளில், தங்குவதற்குரிய மாளிகையாக 'சிராஸ்வதி' விளங்கியது. பெரும்பாலும் தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் எம். பி. களே இந்த விருந்தினர் விடுதியில் தங்கினார்கள்.

1956, யூன், 3 ஆம் திகதி.

மாலைப்பொழுதில், நாகராசன், சிராஸ்வதிக்கு வந்தான். புதிதாக ஏதாவது செய்திகள் கிடைக்கலாம் என்பது அவன் நோக்கமாக இருந்தது. பெரும்பாலான எம். பி. களுக்குத் தலைநகரில் வீடுகள் இருந்தமையால், சிராஸ்வத்தியில் தங்குபவர்கள் குறைவாகவே இருந்தனர்.

அவன் வந்தபோது, சிராஸ்வதி மாளிகையில் ஹோலில் இரு பிரமுகர்கள் அமர்ந்திருந்து உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். ருவர் அவனுக்கு நன்கு பரிச்சயமான வவுனியாப் பிரதிநிதி சுந்தரலிங்கம்; மற்றவர் பாராளுமன்றக் கதிரையை அலங்கரித்த கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரேயொரு தமிழ்ப் பிரதிநிதி பி. கந்தையா. அவர் பருத்தித்துறைத் தொகுதியின் அங்கத்தவராக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முக்போக்காகச் சிந்திக்கின்ற மக்கள், பருத்தித்துறைத் தொகுதியில் தான் உள்ளனர். போலும் -'' என அவன் தேர்தல் முடிவு வெளியானபோது பலரோடு வாதிட்டிருக்கின்றான். ஒருமுறை அவர் அவனுக்கு ஒரு பேட்டி தந்தார். அதில் அவர் குறிப்பிட்டவை அவனுக்கு நினைவு வந்தன.

''நான் கொம்யூனிஸ்ட்... அவர்கள் கொம்யூனலிஸ்ட் (வகுப்புவாதிகள்)... கடந்த இருபத்தைந்து வருடங்களாக வகுப்பு வாதம் பேசியே தமிழ் அரசியல்வாதிகள், தெற்கேயுள்ள தேசியவாதிகளிலிருந்து தமிழ் மக்களைத் தனித்துப் பிரித்துவிட்டார்கள்... அதனால் இரு சமூக மக்களிடையே ஒருவரையொருவர் சந்தேகத்தோடு பார்க்கும் துர்ப்பாக்கிய நிலையை உருவாக்கிவிட்டார்கள்... நல்லுறவைக் கொடுத்துவிட்டார்கள். அரசியலில் வகுப்புவாதம் தலைதூக்கி விட்டது...'' என்று அவர் கவலைப்பட்டார்.

நாகராசனை இருவரும் ஒரே நேரத்தில் கண்டனர்.

''வாடா, மோனை...'' என்றார் சுந்தரலிங்கம்.

நாகராசன் அவர்கள் முன் சென்று, கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டான்.

''யூன் 5ஆம் திகதிச் சத்தியாக்கிரகத்தில், நீங்களும் கலந்து கொள்கிறீர்களா? ..'' என்று, அவன் அவர்களை நோக்கிக் கேட்டான்.

''இல்லை...'' என்றார் பருத்தித்துறைப் பிரதிநிதி கந்தையா.

''இன்னும் முடிவுசெய்யவில்லை...'' என்றார் வவுனியாப் பிரதிநிதி.

''நீங்களேன் கலந்துகொள்ள விரும்பவில்லை?'' எனப் பருத்தித்துறைப் பிரதிநிதியை அவன் வினவினான். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயைக் கிளறு வதன் மூலம், தர்க்கரீதியான மாறுபட்ட கருத்துக்கள் பிறக்கும் என்பதை அவன் தெரிந்து வைத்திருந்தான்.

''எனக்கு இதில் நம்பிக்கையில்லை'' என்றார் கந்தையா: ''இன்று இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களது பிரச்சினைகளைச் சமஷ்டி அமைப்பின் மூலம் தீர்க்க முடியுமென தமிழரசுக் கட்சியினர் நம்புகின்றனர். அதற்கு நான் உடன்பாடல்லன்... பல்லின, பலமொழி மக்கள் வாழும் பிரதேசங்களுக்குச் சமஷ்டி ஆட்சியே ஏற்றதெனக் காங்கேசன்துறைப் பிரதிநிதி கூறுகிறார்... அதற்கு உதாரணங்களாக சோவியத் சமவுடைமைக் குடியரசு, யூகோசிலாவியா, செக்கோசிலாவிக்கியா ஆகிய நாடுகளைக் கூறுகிறார். இதில் ஓர் உண்மையை மறந்துவிட்டார். இந்த நாடுகள் யாவும் சோஷலிசப் பொருளாதார நாடுகள். அதுதான் அடிப்படை உண்மை... முதலாளித்துவ பொருளாதார நாடுகளில் சமஷ்டியமைப்பின் மூலம் சிறுபான்மை மக்களது பிரச்சினைகளை ஒரு போதும் தீர்த்து விட முடியாது''

''அவ்வாறாயின் சோஷலிசப் பொருளாதார அமைப்பில்தான், சமஷ்டி அமைப்பு சிறுபான்மை மக்களது நலனைப் பாதுகாக்கும் என்கிறீர்களா?''

''இரு சமூகப் பாட்டாளி மக்களது நல்லுறவோடு அது அமையவேண்டும் துரதிர்ஷ்டவசமாக இரு சமூக மக்களிடையே நல்லுறவு, என்பன இன்று அழிந்து வருகின்றது''

அவ்வேளை வவுனியாப் பிரதிநிதி சுந்தரலிங்கம் குறுக்கிட்டார்:

''1944 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் இரு சமூகங்களிடையே பிளவு தோன்றத் தொடங்கிவிட்டது. மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகத்துக்குப் பின்னர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுக்குப் பின்னர், இலங்கையில் தேசியவாதம் உச்சநிலையில் இருந்தபோது, ஆங்கிலத்தோடு சிங்களமும் அரசகரும மொழியாக இருக்க வேண்டுமென ஒரு பிரேரணையை திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு ஆட்சிமன்றத்தில் கொண்டு வந்தார். பின்னர் ஒரு கட்டத்தில் 'தமிழும்' என்ற வார்த்தை பேச்சளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்று இலங்கையின் இரு சமூகங்களிடையே சந்தேகப்பார்வை படர்ந்தது... அது 1954 இல் உச்சநிலையை அடைந்தது. யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அன்றைய பிரதம மந்திரி சேர். ஜோன் கொத்தலாவலைக்குக் கொக்குவிலில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரவேற்பில் மகிழ்ந்த பிரதமர், 'சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசகரும மொழியாகும். தமிழுக்குச் சம அந்தஸ்து. அதற்காக அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்படும்' என்ருர். பத்திரிகைகள் இதனைப்பெரிது படுத்தின. தெற்கில் எம். ஈ. பி. இதனை எதிர்த்து மாபெரும் பிரச்சாரத்தைத் தொடங்கியது... 24 மணி நேரத்தில் சிங்களம் அரசகரும மொழியாகும் என்றது! வடக்கில் தமிழரசுக்கட்சி... அரசியல் சதுரங்கத்தில் மக்கள்! அதன் விளைச்சல் தான் இன்றைய ஆட்சி . 5 ஆம் திகதி நடக்கப்போகின்ற சத்தியாக்கிரகம்''

நாகராசன் அவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். விடைபெறும்போது இறுதியாகக் கேட்டான்;

''தமிழரசுக் கட்சியினரின் கொள்கைகளை தமிழ்மக்கள் ஏற்றுக் கொண்டதால் தான், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 16 தொகுதிகளில் 10 தொகுதிகளுக்குத் தங்களைத் தெரிந்தெடுத்துள்ளனர் என்கின்றனரே?...''

''அதுதான் சனநாயகத்தின் குறைபாடு—'' என்ருர் பருத்தித்துறைப் பிரதிநிதி கந்தையா. ''பதினன்கு தொகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகளில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியினர் 1,42,000 வாக்குகளைப் பெற்றுள்ளனர். அதேவேளை 1,46,000 மக்கள் இவர்களுக்கு எதிராக இத்தொகுதிகளில் வாக்களித்துள்ளனர் தெரியுமா?...''

அவன் சிந்தித்தபடி விடைபெற்ருன்.

# 9

அம்மா கடிதம் எழுதியிருந்தாள்.

அக் கடிதத்தை நாகராசன் தான், எடுத்து வந்து சுரேந்திரனிடம் கொடுத்தான். அவன் அன்று இருந்த மனநிலையில், விடுதியின் கடித 'போர்டி'ல் மாட்டியிருந்த தனது கடிதத்தைக்கூட எடுக்கத் தவறிவிட்டான்.

'ஆருடைய கடிதம்... உன் அம்மாவா?'

சுரேந்திரன், கட்டிலில் படுத்திருந்தபடி, கடிதத்தைப் பிரித்தான். இரண்டுபக்கங்களில் கடிதம் விரிந்தது. மூன்று நாள் நிகழ்வுகளை கடிதத்தில் எழுதியிருந்தாள் இறுதியில்...

'உன் அக்காவிற்கு ஓரிடத்தில் கலியாணம் சரிவரும் போல இருக்குது. பொடியன் உனக்குத் தெரிந்தவன் தான். பொன்னம்பல மாஸ்ரரின் மகன். முனிசிப்பாலிட்டியில் வேலை செய்யிருன். சீதனம் பெரிசாக ஒன்றுமில்லை. எங்களிடம் கொடுக்க என்ன இருக்குது? கொண்ணருக்குத் தன் குடும்பத்தைப் பார்க்கவும் கட்சிக் கூட்டம் என்று செலவழிக்கவும் சம்பளம் காணுது... அவர்கள் கேட்கினம். மாத்துச் சம்பந்தம் செய்யட்டாம். அந்தப் பொடியனுக்கு ஒரு தங்கச்சி இருக்குது. உங்குதான் ரீச்சராக இருக்கிருவாம். உன்னேடு மாத்துக் கலியாணத்துக்குக் கேட்கினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா 'ஓமெ'ண்டிட்டார் எதுக்கும் நீ உன் பதிலே எழுது'

சுரேந்திரன், கட்டிலில் நிமிர்ந்து அமர்ந்தான். தலை 'விண்' எனக் கனத்தது.

# 10

வெண்மணலில் அமர்ந்து, கரங்களால் கால்களைக் கட்டியவாறு, நாடியை முழங்காலில் பதித்தபடி சோமா அமர்ந்திருந்தாள். அவள் விழிகள் வெகுதூரத்தில் அடிவானில் நிலைத்திருந்தன. இரத்தத்தில் தோய்ந்த தங்கத் தாம்பாளம் ஒன்று, மேலைக் கடலினுள் தன்னை மெல்லப் புதைத்துக் கொள்ளத் தொடங்கியிருந்தது.

கடற்கரை மணலில் புரண்டு கிடந்த கருங்கல் பாறையில், சுரேந்திரன் இருந்தான். தென்மேலைக்காற்றின் வலிய தழுவலால் பொங்கிப் பிரவகித்தெழுந்த அலைக் கரங்கள் கரையைப் பாதுகாக்க இடப்பட்டிருந்த கருங்காற்றிலவிவுகளில் 'பளார் பளார்' என மோதித்திரும்பின.

அவர்கள் அமர்ந்திருந்தவிடம், நிலப்புற உட்குழிவாக இருந்தால், வலிய அலைகளின் ஆர்ப்பரிப்பு, அவர்கள் இருந்த இடத்திலிருந்து சற்று முன்பே இருந்தது, 'கடகட' வென ஓசை எழுப்பியபடி, கரையோரப் புகையிரதங்கள் அடிக்கடி அசுரவேகத்தில் விரைந்து கொண்டிருந்தன.

சுரேந்திரன் அவளை, விழிகளை அகற்றாது பார்த்துக் கொண்டிருந்தான். மாலைக் கதிர்களின் தழுவலில், வெண் மணலில், அவள் ஒரு சோகக் கவிதையாகக் காத்திருப்பதாகப் பட்டது. முன்னர் பார்த்ததிலும் அவள் வாடியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சோமா...'' என அவன் மெதுவாக அழைத்தவாறு, அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்: ''நானிருக்கிறேன், சோமா...''

அவள், அவனைத் திரும்பிப் பார்த்தாள். கண்களில் நீர் திரண்டது.

''இனி நாங்க சந்திக்கவே முடியாது, சுரேன். இது தான் எங்களது கடைசிச் சந்திப்போ...'' என்ற சோமாவின் உதடுகளை அவன் விரல் பதித்துத்தடுத்தான்.

''அப்படிப் பேசாதே, சோமா... எவர் எதிர்த்தாலும் சரி, நீதான் என் மனைவி...''

''புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்கள். நாம் இருவருமா உலகம்? என் பெற்றோர், உங்கள் பெற்றோர் எல்லாரையும் வெறுத்து நாம் ஒன்று சேர்ந்து வாழ்ந்துவிடத்தான் முடியுமா? தெரிந்தோ தெரியாமலோ, என் அண்ணன் தமிழர் என்றதும் புண்ணில் குழம்பு பட்டது போலக் கொதிப்படைகிறான்...''

''விஜயபாலாவா?...''

''அவனுக்கு உங்களைப் பிடிக்கவில்லை. அவனோடு சேர்ந்து கொண்டு, அம்மாவும்... சுரேன். நாம் ஒன்று சேரவே முடியாது...''

அவன் எதுவும் பேசாது அவளை ஏக்கத்தோடு சில கணங்கள் பார்த்தான்.

அரசியல் வாதிகளினால், இந்த நாட்டின் சமூகங்களிடையே பகைமை தலை தூக்கிவிட்டது. ஒருவரையொருவர் ஐயத்தோடும், பொறாமையோடும் நோக்குகின்ற துரதிர்ஷ்டநிலை உருவாகிவிட்டது. நாட்டின் வறுமைக்கும் வேலையின்மைக்கும் மூலகாரணம், 'சிங்களம் அரசகரும மொழியாக ஆக்கப்படாமைதான்' என்குமாப்போல, அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சாரங்கள் நிகழ்ந்தேறிவிட்டன. அரசியல் வாதிகள் மேடைகளில் வாந்தி எடுத்த இனவாதத்தை இன்று சாதாரண மக்கள் ஒருவருக்கொருவர் கக்கத் தொடங் விட்டார்கள்.

நேற்றுக்கூட கந்தோரில் ராஜபக்ச அவனைப் பார்த்து ஏசினன்:

''இன்றைக்கு எங்கட நாட்டின் உயர் பதவிகளில் எல்லாம் தமிழர்கள் இருக்கிறார்கள். அரசாங்க அலுவல கங்களில் சாதாரண வேலைகளில் தான் சிங்களவர்கள் உள்ளனர். யூனிவேசிற்றியில் மெடிக்கல், எஞ்சினியரிங் பிரிவுகளில் பெரும்பான்மை மாணவர்கள் யார் தெரியுமா? சிறுபான்மையினரான தமிழர்கள் தான்... இது ஒரு இனத்துக்கு, ஆளும் இனத்துக்கு நிகழ்கின்ற அநீதி... இவை மட்டுமா? நாட்டில் எந்த மூலைமுடுக்குகளில் தான் தமிழரில்லை...? ஒவ்வொரு சுருட்டுக் கடையோடு தொடங்கி சிங்கள மக்களைச் சுரண்டிக் கொள்கிறீர்கள். முழு வர்த்த கமும் தமிழர் கைகளில்... இந்த நிலை இனியும் தொடரக் கூடாது... சிங்கள மக்கள் விழித்துக்கொண்டார்கள்...''

''இதை ஏன் எனக்குச் சொல்கிறாய், ராஜபக்ச ?'' என்று சுரேந்திரன், சற்றுக் கோபத்துடன் கேட்டான்: ''தமிழர்கள் படித்தார்கள்... பதவிகளுக்கு வந்தார்கள். உங்களைப் படிக்க வேண்டாம் என்று நாங்களா சொல் கிறோம் ''

''சிங்களவர்களை 'மோடையா' என்கினம். யாழ்ப்பாண தெமுளுமினிசுகளின் எண்ணம் அப்படித்தான். அந்த எண்ணம் யூன் 5ஆம் திகதியோடு மாற்றியமைக்கப்ப டும்...''

காரணமின்றித் தன்மீது ராஜபக்ச ஆத்திரப்படுவதாக அவனுக்குப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாங்கள் அப்படி எண்ணவில்லை...''

''பின்னர் எப்படி எண்ணுகிறீர்கள்? உங்களுக்கு இந்த நாடு வேணும்... உயர் உத்தியோகங்கள் எல்லாம் வேணும், யூனிவேசிற்றி முழுவதும் வேணும் .. வியாபாரம் முழுவதும் வேணும்... இவ்வளவும் போதாதென்று சிங்களப் பெண்களும் தேவையாக இருக்குது ...'' என ராஜபக்ச உறுமினான்.

''நான்சென்ஸ்...'' என்றான், சுரேந்திரன்.

''ஸ்ரொப்தற் .. ஆகுயுரொன்ற் ..'' என்று தனது மேசையில் தட்டினார் சி. சி சண்முகம்பிள்ளை.

''நீ பேசாமல் இரு .. அவனோடுவாய் கொடுக்காதே...'' என்றான், பக்கத்து மேசையிலிருந்த நித்தியானந்தன்.

சிங்கள – தமிழ் மக்களிடையே பெரும் இடைவெளி வெகுவேகமாக ஏற்படத்தொடங்கிவிட்டது. இந்த இடைவெளி இன்னும் காலகதியில் அதிகரிக்குமேதவிர, குறுகப் போவதில்லை என எண்ணிக் கொண்டான். இந்த இடைவெளி, தங்கள் காதலிலும் பிளவைத் தோற்றுவிக்கப் பார்க்குமென சுரேந்திரன் எண்ணியிருக்கவில்லை.

சோமா இப்போது அதைத்தான் சொல்கிறாள்.

நேற்றிரவு அறையில் படுக்கும் போது, நாகராசனும் அதையே சொன்னான்.

''யூன் 5 ஆம் திகதி, காலிமுகத்திடலில் தமிழரசுக் கட்சியினர் செய்யப் போகன்ற சத்தியாக்கிரகம் ஒழுங்காக நடக்குமபோல எனக்குத் தெரியவில்லை அதை ஒரு காரணமாக வைத்து, தமிழருக்கு எதிராக வன்செயல ஒன்று கட்டவிழ்த்துவிடப்படுமென நினைக்கிறேன். அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகின்றது. ஒருவிதமான பதற்றம் நகரில் நிலவுகிறது...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்திரன் அன்று அவற்றை அவதானிக்கும் நிலையில் இருக்கவில்லை. அவன் மனதில் தாயார் எழுதிய கடிதமும், சோமாவின் நினைவுமே சுழன்றன.

''என்னடா, கடும்யோசனை?'' என்று நாகராசன் கேட்டான். சுரேந்திரன் தாயின் கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினுன். அதனை வாங்கிப் படித்துவிட்டு, சுரேந்திரனை ஒரு வினுடி ஏறிட்டுப்பார்த்தான்.

''இதற்கு என்ன பதில் எழுதப்போகிருய்?''

''என்ன எழுதுவதென்று தெரியவில்லை...''

''என்னைக்கேட்டால், உன் பெற்ருர் எடுத்த முடிவு சரியானதாகப்படுகின்றது...''

சுரேந்திரன் கட்டிலில் நிமிர்ந்தமர்ந்து கொண்டான்.

''விசர்... சோமாவை ஏமாற்றுவதா? ...''

''அது நிகழக்கூடியதாக எனக்குத் தெரியவில்லை...''

''எத்தனை பேர் சிங்களப் பெண்களைக் கட்டியிருக்கிருர்கள்?...''

''அது கொழும்பில் பிறந்து வாழ்கின்ற ஹைகிளாஸ் சொசைற்றிக்குச் சரி... பிரச்சினை இல்லை! யாழ்ப்பாணத்தின் கட்டுப்பாடான ஒரு சமூகத்தில் பிறந்த உனக்கும், தென்னிலங்கையின் எங்கோ ஒரு பிற்போக்கான கிராமத்தில் பிறந்த ஒருத்திக்கும் இருவரும் தமிழராக இருந்தாற் கூடச் சரிவராத ஒரு சம்பந்தம்... சரிவருவதாவது? வீணுசை ஆசைகளை மனதில் வளர்க்காது, உன் அக்காவுக்கு வாழ்வு கொடுக்க, இந்த மாற்றுச் சம்பந்தத்துக்கு ஒப்புக்கொண்டு பதில் எழுது...''

சுரேந்திரன் எதுவும் பேசாமல் கட்டிலில் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு வானில் சூரியன் தன்னை முற்றாக மறைத்துக் கொள்ளத் தொடங்கியிருந்தான். வானில் வர்ணக் கலவைகளை அள்ளித்தெறித்தாற்போல, காட்சி விரிந்தது.

சோமா அவனைப் பார்த்தாள்.

''சுரேன்... அம்மாவும் அண்ணையும் பிடிவாதமாக இருக்கிறார்கள். இனிமேல் உங்களோடு என்னைக் கண்டால், வேலையால நிற்பாட்டி ஊருக்கு நிரந்தரமாகக் கூட்டிக் கொண்டு போய் விடுவார்களாம்... நான் என்ன செய்ய?'' என்று சோமா அவனை இரந்தாள்.

''சோமா... ஏன் உன் அம்மாவும் அண்ணனும் இப்படி நடந்து கொள்கிறார்களோ? தமிழன் என்கிறதாலா? ..''

''அதுவும் ஒரு காரணம்தான் .. என் உழைப்பில்தான் இன்று எங்கள் குடும்பம் ஓரளவு ஓடுகிறது. அதனை இழக்க அவர்கள் விரும்பவில்லைப்போல இருக்கிறது...''

''உன் உழைப்புக்காகவா நான் உன்னை நேசிக்கிறேன்? நாம் கலியாணம் செய்த பின்னரும் நீ உன் குடும்பத்திற்கு உழைத்துக் கொடுப்பதில் எனக்குத் தடையில்லை. சோமா...''

அவள் மௌனமாக இருந்தாள். காற்றின் அலைக்கழிப்பால் அவள் கூந்தல் மயிர்கள் சிலிர்த்தாடின. சாய் கதிரின் தழுவலில் அவள் மேனி பொன்னிறமாகத் தெரிந்தது.

''சோமா...'' என்றழைத்தவாறு, அவளுடைய கரத்தை அவன் பற்றினான். அவள் தடைசெய்யவில்லை. அப்படியே அவனில் சாய்ந்தபடி விம்மத் தொடங்கினாள்.

''சோமா இதென்ன?...''

''இன்று ஒபிசில் ராஜபக்ச என்னுடன் விசர்க்கதையெல்லாம் பேசினான். அவனுக்கு ஏன் உங்களில் இவ்வளவு ஆத்திரம்?...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்திரனின் உடல் கோபத்தால் மெதுவாக நடுங்கியது.

"என்ன கேட்டான்...?

"அதை விடுங்கள் நானும் தாறுமாறாக ஏசிவிட்டேன்"

"நான் அவனோடு பேசிக்கொள்கின்றேன்..."

அவர்கள் வெகுநேரம் கடற்கரையில் அமர்ந்திருந்தனர்.

"அடுத்த வாரம் அம்மா இங்கு நிரந்தரமாக வாறா. கொட்டகேனாவில் வீடு எடுத்திருக்குதாம் அதன் பிறகு நாம் அடிக்கடி சந்திக்காதிருப்பது நல்லது, சுரேன்..."

அதற்கு மறுப்புச் சொல்ல அவனால் முடியவில்லை. வேதனையோடு தலையை ஆட்டினான்.

## 11

பாராளுமன்றத்தின் நிருபர் கலரியில் நாகராசன் அமர்ந்திருந்தான். மூதூர்ப்பிரதிநிதி எம். ஈ. எச். மொகமட் அலி, தனித் தமிழில் சபையில் பேசிக்கொண்டிருந்தார்.

"சபாநாயகர் அவர்களே! மக்கள் முன்னணி அரசாங்கத்தால் இன்று கொண்டு வரப்பட்டிருக்கும் 'சிங்களம் மட்டும்" மாசோதாவை முழுமூச்சுடன் எதிர்க்கவே எழுந்து நிற்கின்றேன். இம் மசோதா அமுல் நடத்தப் பட்டால், இலங்கையில் இன்று நிலவும் ஐக்கியத்தை அது குலைத்துவிடும். பாரதூரமான நிலைமைகளெல்லாம் இதனால் ஏற்பட்டு விடும் இந்தப் புனிதமான புத்த ஜயந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் சிறுபான்மையோரை நெருக்க, மக்கள் அரசாங்கத்தினர் இந்தப் பாரதூரமான மசோதாவைக் கொண்டு வந்திருப்பது வருந்தத்தக்கது. இந்த மசோதா ஜனநாயகத்துக்கு முற்றிலும் மாறானதாகும் இந்த மசோதாவை மானமுள்ள எந்த ஒரு தமிழ்பேசும் மகனும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நான் அரசாங்கத்திற்கு வற்புறுத்திக் கூறுகின்றேன்...

''எங்களுடைய பிரதமரவர்கள் சில நேரங்களில் கூறியிருக்கிறார்கள். மக்களை நாங்கள் உணர்ச்சிவசப்படுத்தி விட்டிருக்கின்றோம். ஆனபடியால் இம் மசோதவை அங்கீகரிக்க ஒத்துக்கொள்ளுங்கள் என்று. எங்களுடைய பிரதமரவர்கள் சில இடங்களில் அப்படிக் கூறலாம். அதுவும் சில வேளைகளில் கூறலாம். ஆனால் அதனை நாங்கள் எப்பொழுதும் நம்பமுடியுமா என்று நான் கேட்க விரும்புகின்றேன். ஏனென்றால் அவர்களுடைய அரசாங்கத்திலே தீவிர வகுப்பு வாதிகளும் உணர்ச்சிவசப்பட்ட மந்திரிமார்களுமிருக்கிறார்கள். அவர்களால் தான் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இந்த மசோதாவை இவர்கள் அவசரப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். இம் மசோதாவை இந்த நேரத்தில் கொண்டு வந்திருக்கக்கூடாது. அவர்கள் நன்றாக ஆலோசனை செய்து இலங்கையிலுள்ள எல்லாச் சமூகத்தினரையும் கலந்து ஒரு வட்டமேசை மகாநாடு கூடி சுமுகமாக இதைத் தீர்த்துக்கொண்டிருக்கலாம்.

''மொழி ஒருவருக்கு ஜீவநாடியாகும். ஒருவரின் மொழியை இன்னொருவரின் தொண்டைக்குள்ளே பலாத்காரமாகப் புகுத்த எத்தனிப்பது ஜனநாயகத்திற்கு முரண்பாடான வழியாகும். பிரதமரவர்கள் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பளிக்கப்படுமென்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய இந்தச் சொல்லை நாங்கள் நம்பமுடியுமா என்று நான் கேட்கிறேன். அவர்களுடன் இருக்கும் மற்ற மந்திரிமார்கள் இவ் வாக்குறுதியை நிறைவேற்ற விடுவார்களா?...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் பிரதமர் பண்டாரகநாயக்க குறுக்கிட்டு கூறினர், ''டு நொட் பி எப்ரெயிட் ஒப் தற். நீங்கள் அதற்குப் பயப்படத்தேவையில்லை.''

''இன்றைய நிலையைப் பார்த்தால் அதுதான் முடியாத காரியமாக இருந்து கொண்டிருக்கின்றது. கௌரவ பிரதம மந்திரி அவர்கள் பெரும் பான்மைச் சமூகத்தினர்க்கு எந்தெந்த நன்மைகளைச் செய்ய இருக்கின்ருர்களோ, அதே சலுகைகளைச் சிறுபான்மைச் சமூகத்தினருக்கும் அவர்கள் வழங்க வேண்டும். ஏனென்ருல் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு மட்டும் பிரதமராக இருக்கவில்லை. முழு இலங்கைக்கும் பிரதமராக இருக்கிருர். இலங்கையில் வசிக்கும் எல்லாச் சமூகத்தினருக்கும் சகல உரிமைகளையும் வசதிகளையும் நியாயமான முறையில் செய்து கொடுக்க வேண்டியது அவர்களது கடமை...''

நாகராசன், மூதூர்ப் பிரதிநிதி மொகமட் அலியின் பேச்சுக்களைச் சுருக்கக் குறிப்பாக எழுதிக் கொண்டான். சிறுபான்மை மக்களின் அரசியல் வரலாற்றில் பெரும்பாதிப்பு நிறைந்த ஒரு காலகட்டம், திடமாக உருவாகி வருவதை அவனுல் உணர முடிந்தது. அவன் எழுந்து வெளியே சென்றுவிட்டுத் திரும்பி வந்தபோது, ஊர்காவற்றுறைப் பிரதிநிதி வி. ஏ. கந்தையா சபையில் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

''சபாநாயகர் அவர்களே, தமிழ் மொழி அழியாப்புகழுடன் பலபல நூற்றுண்டுகளாக இலங்கையிலே விளங்கி மக்களால் பேசப்பட்டு வருகின்றது என்பதை எவரும் அங்கீகரிப்பர். இலங்கையில் இப்போது துலங்குகின்ற தமிழ்மொழியின் செழிப்பிலே வளம்பெற்றுத் துள்ளி விளையாடியது இந்நாடு. இலங்கையை ஆண்ட அரசர்களும்' சிங்கள மன்னர்களும் அன்பாகவும் ஆதரவாகவும் தமிழை, இளமை குன்ருத இம் மொழியை இனிதென எக்காலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரித்து வந்தார்கள். சீரிளமை சிதை யாது. செம்மை குன்ருது வாழ்ந்தாள், தமிழ்த் தாய். தமிழர்களால் உள்ளன்புடன், உளப்பூரிப்புடன் உரையாடப்பட்டு அழியா இளமையுடன், சீரிய சீலத்துடன் விளங்கி வந்தது. ஆனல் இன்று எங்கள் சிங்களச் சகோதரர்களின் இந்த ஒரு புதிய திட்டத்தினுல் அதன் பெருமையையும் உரிமை அத்தனையையும் பறித்து, புறக்கணித்து அம்மொழியை அழிந்து மறைந்து போகுமோ என்ற மனப்பயம் எங்களைத் தாக்குகிறது. போதிய காரணமெதுவுமில்லாது, தமிழின் பெருமையையும் தமிழரின் உரிமையையும் பறித்து இந்தச் சிங்களம் மட்டும் என்னும் சதித்திட்டத்தைச் சமர்ப்பிக்கின்ருர்கள். இதை நினைந்து உருகு உருகி தமிழினம் இன்று தத்தளித்துக் கதறுகின்றது. நீதிக்கு முழுமாருனதும் அநீதியானதும் இந்தத் திட்டம். அறமும் மெய்மையும் என்றும் வெல்லும். ஆகையினுல் தயங்காமல் இறுதிவரையிலும் அயராது தமிழ்மொழியைக்காக்க அறப்போர் புரிந்து அழியாத தமிழுக்கு இலங்கையில் இனி வாழ்வு கொடுப்போம் என்பதை மாத்திரம் இங்கு சொல்லி வைக்க விரும்புகின்றேன்.''

நாகராசன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் இரவு 9-05. விழிகள் சோரத் தொடங்கியிருந்தன. பாராளுமன்றப் பேச்சுக்களைக் கேட்பதிலும் குறிப்பு எடுப்பதிலும் அலுப்பு ஏற்படத் தொடங்கியது. எழுந்து செல்வோமா என நினைத்தபோது, வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஏ. அமிர்தலிங்கம் எழுந்தார்.

''தமிழ் மக்களுடைய சரித்திரம் நம்பிக்கெட்டவர்களுடைய சரித்திர மாகத்தானின்றது. நாம் இனியும் நம்பிக்கெடத் தயாராகவில்லை. இந்த நூற்ருண்டில் நிகழ்ந்தேறிய ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன். **1915** ஆம் ஆண்டின் இருண்ட காலப்பகுதியில், சிங்கள முஸ்லீம் இனக்கலவரத்தின் போது, பிரித்தானிய அரசால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத் தலைவர்கள் சிறையில் தள்ளிப்பட்டார்கள். வீதியில் பிரித்தானிய அரசால் சிங்கள மக்கள் சுட்டுத்தள்ளப்பட்டார்கள். அவர்களுக்காகப் பரிந்து பேச எவருமில்லாத கட்டத்தில், தமிழ்த்தலைவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் தான் முன் வந்தார். கிறேற் பிரிட்டனுக்குச் சென்று வாதாடி, சிங்களத் தலைவர்களைச் சிறைமீட்டார். 1918 ஆம் ஆண்டில் தமிழ்த்தலைவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் தான், இலங்கைத் தேசிய காங்கிரசை உருவாக்கி, இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடக் களம் அமைத்தார். இவர்களுக்கு இன்று கிடைத்திருக்கும் பரிசுகள் எவை?''

நாகராசன் சபையைப் பார்த்தான். ஏராளமான கதிரைகள் வெற்றிடமாக இருந்தன. பல அங்கத்தவர்கள் வெளியேறிருந்தார்கள். சபையில் 'கோரம்' இல்லாததைை அவதானித்த சபாநாயர் 'டிவிசன் பெல்ஸ்' ஒலிக்கச் செய்தார். வெளியில் நின்றிருந்த அங்கத்தவர்கள் சிலர் உள்ளே வந்து அமர, 'கோரம்' காணப்பட்டது.

''முக்கியமானதொரு மாசாதா மீதான விவாதத்தில் இவ்வாறு இருப்பது கவலைக்குரியது...'' என்றார் வட்டுக் கோட்டைப் பிரதிநிதி அமிர்தலிங்கம்.

''இல்லாதவர்கள் எல்லாரும் அரசாங்க அங்கத்தவர்கள்...'' என்றார் வவுனியாப் பிரதிநிதி.

''உங்கள் அங்கத்தவர்களில்லையா?'' என்று குறுக்கிட்டார் சி. பி. டி. சில்வா.

''இது உங்களது மசோதா...'' கலாநிதி என். எம். பெரேரா.

''யூ ஆர் நோட்வேர்த் ஏ கோரம்'' என்றார் சுந்தரலிங்கம்.

அமிர்தலிங்கம் தமது பேச்சைத் தொடர்ந்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கை மிகச்சிறியநாடு அதனால் இரண்டு மொழிகளை அரசகரும் மொழியாக்க முடியாது என்கின்றனர். மெய்யாகவே தம்புளை எம். பி. க்கு எப்போதும் இரு மனைவிமார் பற்றிய கவலைதான். இந்த நாட்டின் புராதன சிங்கள மன்னர்கள் இருமனைவிமாரை வைத்திருந்தார்கள்..."

"இல்லை இரு கணவன்மாரை" என வவுனியாய் பிரதிநிதி மீண்டும் குறுக்கிட்டார்.

"எதுவோ? இலங்கை இரு மொழிகளைக் கொண்டிருப்பதற்குச் சிறிய நாடா? பதினாறாயிரம் சதுரமைல் பரப்புடைய சுவிற்சலாந்தில், இலங்கையிலும் ஐந்தில் மூன்று பங்கு பரப்புடைய சுவிற்சலாந்தில், நான்கு மொழிகள் சம அந்தஸ்தில், அரசகரும மொழிகளாக இல்லையா?"

"தமிழ்மக்கள் இந்த நாட்டிற்கு இரப்பவர்களாகவோ அடிமைகளாகவோ வரவில்லை. அவர்கள் தங்கள் உரிமைகளுடன் இந்த மண்ணில் எசமானர்களாகவே வாழ்ந்தார்கள். 1948 ஆம் ஆண்டு 10 ஆ திகதி, கங்கேசன்துறைப் பிரதிநிதி, இந்திய பிரசாவுரிமை மசோதா மீதான விவாதத்தில் குறிப்பிட்டார். இன்று இந்தியத் தமிழருக்கு நடப்பதுதான் நாளை நமக்கும் நடக்கும்' என்று. அது இன்று நிதர்சனமாகிவிட்டது. சிங்கள மக்களுக்கு தமது மொழியையும் கலாச்சாரத்தையும் பேணி வளர்க்க எவ்வளவு உரிமையுண்டோ அது போன்ற உரிமை எமக்கும் உண்டு. நாங்கள் அஹிம்சை வழிகளில் நம்பிக்கை கொண்டவர்கள்; வன்முறைகளை விரும்பாதவர்கள். சாத்வீக வழிகள் மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்கப் போராடுவோம்... நான் இன்னும் என் பேச்சை முடிக்கவில்லை. இன்றிரவு எவ்வளவு நேரம் சபைகூடும் என்பதைத் தெரிந்தால், என் உரையை நான் தொடர வாய்ப்பாக இருக்கும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தொடர்ந்து பேசலாம்...'' என்ருர் சபைமுதல்வர் சி. பி. டி. சில்வா.

''நாங்கள் இரவுச் சாப்பாட்டிற்குப் போகவும் வேண்டும்...'' என்ருர் கோப்பாய்ப் பிரதிநிதி வன்னியசிங்கம்.

சபை ஒத்திவைக்கப்பட்டது. நாகராசன் சோர்வுடன் புறப்பட்டான்.

## 12

சுரேந்திரன் கோபத்தோடு ராஜபக்சவைப் பார்த்தான்.

''டியர் மிஸ்டர் ராஜபக்ச, யூ காவ் நோ பிளடி பிஸ்னஸ் வித் சோமா... உனக்குச் சோமாவோடு எதுவித பேச்சும் இல்லை... உனக்கென்ன அவளோடு பேச்சு?''

ராஜபக்ச, நிமிர்ந்து சுரேந்திரனைப் பார்த்தான். அவன் முகம் ஆத்திரத்தால் சிவந்தது.

''நீ ஆர் அதைச்சொல்ல?''

''நான் சோமாவின் காதலன். அவள் என் மனைவியாகப் போகிறவள். பி கியபுள். அவளோடு இனி ஏதாவது விசர்க்கதை பேசினல், உன்னைச் சும்மா விடமாட்டேன்.''

''என்னடா செய்வாய்?'' என்று கதிரையைப் பின்னுல் தள்ளியபடி, ராஜபக்ச எழுந்தான் சுரேந்திரன் ஒருகணம் தன்னை மறந்தான். விருட்டென எழுந்த ராஜபக்சாவின் சேர்ட் கொலரை வலக்கரத்தால், இறுகப்பற்றிச் சூழுக்கிப்பின்னுல் தள்ளிவிட்டான். ராஜபக்ச இப்படி ஒரு தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. ஒருகணம் உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகுலைந்துபோய், திக்கித்து நின்று விட்டான. பலர் ஓடி வந்து இருவரையும் பிடித்தார்கள்.

முதன் முறையாக அந்த அலுவலகத்தில், இனரீதியாக இரண்டு கட்சிகள் பிரிந்தன.

"சந்தர்ப்பம் வரும்போது உனக்கு நான் பாடம் படிப்பிக்கின்றேன்..." என ராஜபக்ச உறுமினான்.

## 13

1956 யூன் 5

பாராளுமன்றக் கட்டிடத்தின் முன், பனியால் நனைந்து குளிந்திருந்த புற்றரையில், இருநூறு சத்தியாக்கிரகிகள் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். கீழைவானில் துயரோடு கதிரவன் எழ, பாராளுமன்றக் கட்டிடத்தின் கரும் நிழல் இராச்சதக்கரமாக அச்சத்தியாக் கிரகிகள் மீது படர்வதை நாகராசன் கண்டான்.

மேற்கே கடல் அலை எழுந்து ஆரவாரித்தது.

நேரம் காலை 8-30 மணி.

காலிமுகத்திடலில் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமி நின்றிருந்தார்கள். வடக்கு பக்கத்தில் சிங்கக் கொடி ஒன்றினைத் தாங்கியபடி, கோஷமிட்டவாறு சிங்கள மக்கள் நூற்றுச்கணக்கில் நின்றிருந்தார்கள். பார்த்தவிடமெல்லாம் பொலீஸார் காணப்பட்டனர்.

"எனக்கு ஏனோ மனச்சங்கடமாக இருக்கிறது, நாகி! இங்கு குழுமி நிற்கும் காடையர்கள் எதுவும் செய்வார்கள்" என்றான் சுரேந்திரன். அவன் குரலில் கவலை கோடிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் அண்ணரும் சத்தியாக்கிரகிகளில் ஒருவராக அமர்ந்திருப்பதனுலா?'' எனக்கேட்டுவிட்டு நாகராசன் புன்னகைக்க முயன்ருன்.

தமிழரசுக் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் புற்றரையில் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் பலரை அவர்களுக்குத் தெரியும்.

''அஹிம்சை முறையில் சத்தியாக்கிரகம் மூலம் தமது எதிர்ப்பைக் காட்ட விரும்பும் தமிழரின் நோக்கத்தினை, இங்கு இப்போது கூடியிருக்கும் சிங்களவர் எவ்வளவு தூரம் புரிந்து கொள்வார்கள் என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது—'' என்ருன் நாகராசன் மெதுவாக.

வடக்குப் புறமிருந்து கல்லொன்று பறந்து வந்து சத்தியாக்கிரகிகளின் மத்தியில் விழுந்ததைச் சுரேந்திரன் கண்டான். அதனைத் தொடர்ந்து பல கற்கள் பறந்தன.

''கற்களால் எறிகிருர்கள், நாகி! பொலீஸார் பாத்துக் கொண்டு சும்மா நிக்கிருர்கள்..'' என சுரேந்திரன் ஆத்திரப்பட்டான்.

அதன்பின் காலிமுகத்திடலில் காடையரின் அட்டகாசம் ஆட்சி புரியத் தொடங்கியது. சத்தியாக்கிரகிகளைச் சூழ்ந்து கொண்ட காடையர்கள், மூங்கில் தடிகளாலும் கைகால்களாலும் தாக்கினுர்கள். சத்தியாக்கிரகிகள் எவரும் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. காயங்களிலிருந்து இரத்தம் வழிய அவர்கள் அவ்விடத்தில் அமர்ந்திருந்தார்கள்.

''கொடுமை...'' என வீரீட்டான் சுரேந்திரன்.

''பொறுமையாக இரு சுரேன்''

''அங்கை பார், நாகி! என் அண்ணனை இரண்டு காடையர்கள் இழுத்துப் போகிருர்கள்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமியை ஒவ்வொரு கரத்தில் ஒவ்வொருவரா கப் பற்றி, இரண்டு காடையர்கள் தரையில் 'கொறகொற' வென இழுத்துச் சென்றார்கள். வெள்ளை வெளேரென்ற அவரது வேட்டியும், நஷனலும் மண்தரைச் சேற்றில் தோய்ந்து இழுபட்டன. அக்காட்சியைக் கண்ட சுரேந்தி ரன், அவ்விடத்திற்கு ஓட முயன்றான்.

நாகராசன் அவனது கரத்தைப் பற்றித் தடுத்தான்.

''எதுவும் நடக்காது, பயப்படதே...''

குமாரசாமியை இழுத்துச் சென்றவர்கள் அவரை ஒருவன் கால்களிலும், மற்றவன் கைகளிலுமாக அப்படியே தூக்கி, முன் பின்னாக ஊஞ்சலாட்டி விட்டு, பாராளுமன் றத்தின் அருகே தேங்கிய ஏரியில் வீசி எறிந்தார்கள். அழுக்கேறிப் பசுமை போர்த்திருந்த ஏரி நீரில் குமார சாமி ஒரு தடவை மூழ்கி எழுந்தார். இடுப்பளவே ஏரியில் நீர் இருந்தது. மேதுவாக நடந்து கரைக்கு வந்தார்.

சுரேந்திரன், சனத்திரளை முட்டி மோதிக் கொண்டு பாய்ந்து வந்து அவரைப் பற்றிக் கரையேற்ற முயன்றான். அதற்குள் அங்கு நின்றிருந்த இரு சிங்கள இளைஞர்கள் அவரைத் தூக்கி கரையேற்றிவிட்டார்கள்.

குமாரசாமி தள்ளாடி விழப்பார்த்தார். சுரேந்திரன் அவரது வலக்கரத்தைப் பற்றித் தூக்க முயல, அவர் வேதனையில் முனுமுனுத்தார்.

''வலது கையைப் பிடியாதை... அது மூட்டோடு விலகிவிட்டது...'' என்றார் குமாரசாமி

அவருக்கு அடிக்கடி, வலது கை மூட்டோடு விலகுவது வழக்கம்.

''வா அண்ணை... போதும் டாக்டர் ஒருவரிடம் காட் டுவம்...''

குமாரசாமி அவனைக் கோபத்தோடு ஏறிட்டுப் பார்த் தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பவோ...? சத்தியாக்கிரகம் முடியும்வரை உயிர் போனாலும் இந்த இடத்தைவிட்டு நகர மாட்டேன்..."

அவர் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று, பழைய இடத்தில் சத்தியாக்கிரகிகளோடு அமர்ந்து கொண்டார். அவருடைய கொள்கைப்பற்றையும் பிடிவாதத்தையும் அவன் உணர்வான்.

வானம் இருந்தாற்போல அழத் தொடங்கியது. சிறிய துளிகள் நிலத்தில் விழத் தொடங்கின.

வெயிலில் காய்ந்த அவர்கள், மழையில் நனையத் தொடங்கினார்கள்.

## 14

1956, யூன் 6. மாலை 5-35 மணி. கோப்பாய் கோமகன் என மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட கோப்பாய்ப் பாராளுமன்றப் பிரதிநிதி வன்னியசிங்கம், தன் இருக்கையைவிட்டு எழுந்தார். பாராளுமன்றக் கதிரைகளில் அமர்ந்திருந்த பிரதிநிதிகளை ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டுத் தனது பேச்சை ஆரம்பித்தார். உயர்ந்த, கரிய திருமேனி; கணீரென்று ஒலிக்கும் குரல் வளம்.

நாகராசன் அவரது பேச்சைக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தான்.

"சபாநாயகர் அவர்களே, எவருடைய உணர்ச்சிகளை யாவது புண்படுத்தும் நோக்குடனே, இழிவுபடுத்தும் நோக்குடனே இங்கு நான் குற்றச்சாட்டுகளைச் சுமத்த விரும்பவில்லை. ஆனால், நேற்று நடந்து முடிந்துபோன நிகழ்வுகளின் உண்மைச் செய்திகளை இப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் அனைவரும் அறியவேண்டி அறிக்கையாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பிக்க விரும்பியே பேசவுள்ளேன்.

''நேற்றுக் காலை 8.30 மணியளவில் நாங்கள் காலி முகத் திடலில் ஒன்று கூடினோம். நாங்கள் இருந்த இடத்திலிருந்து பார்த்த பொழுது பாராளுமன்றக் கட்டிட எல்லையில் ஏராளமான மக்களும், பொலீசாரும், பொலீஸ் வாகனங்களும் காணப்பட்டன. நூற்றுக் கணக்கல்ல, ஆயிரக்கணக்கான மக்கள் ஏற்கனவே பாராளுமன்றக் கட்டிடத்துக்கு அருகில் திரண்டிருந்தார்கள். ஏன், எதற்காக அப்படித் திரண்டிருந்தார்கள் என்பதை உரியவர்களே தீர்மானிக்க வேண்டும். ஆனால், அத்திரண்டிருந்த அக்கூட்டத்தரிடையே ஒரு சிங்களக்கொடி பறந்துகொண்டிருந்தன. நாம் அவதானித்தோம். பொலீசார் எங்கு நின்றிருந்தார்களோ, அங்குதான் அக்கூட்டத்தினரும் நின்றிருந்தார்கள்ஒரு கட்டத்தில் அக்கூட்டத்தினர்எங்களை நோக்கிநகரத்தொடங்கினார்கள். காலி முகத்திடலில், எதுவித சுலோகங்களையும் கூறாது, நாங்கள் அமைதியாக அமர்ந்திருந்தோம். கௌரவ பிரதம மந்திரி கூட, ஈரமான புற்களில் இருந்து நனைகிறார்கள் எனக் குறிப்பிட்டார். எங்களை நோக்கி வந்த அந்தக் கூட்டத்தினர் சுலோகங்களை முழக்கிக் கோஷமிட்டார்கள். எங்களைப் பார்த்து ஏசினார்கள்! கேலி செய்தார்கள். நாம் எதுவுமே கூறாது அமைதி காத்தோம். அந்த வேளையில் வவுனியா எம் பி. சுந்தரலிங்கமும், யாழ்ப்பாண எம். பி. பொன்னம்பலமும் அவ்விடத்துக்கு வந்தார்கள். சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள அவர்கள் வருவார்கள் என நாம் எதிர்பார்க்கவில்லை. கூட்டத்தினர் அவர்களையும் ஏசிக்கேலி செய்தார்கள். அவ்வேளை தான் வவுனியா எம். பி. சுந்தரலிங்கம், அக்கூட்டத்தினரை நோக்கி தலை சாய்த்து வணக்கம் செலுத்தினார்...''

''நமஸ்காரம் இல்லையா?'' எனப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க குறுக்கிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியசிங்கம் தமது பேச்சைத் தொடர்ந்தார்; தனது கரங்களை இடுப்பில் வைத்தபடி தலைசாய்த்து வணக்கம் தெரிவித்ததாகவே நினைவிருக்கிறது. யாழ்ப்பாண எம். பி. 'ஒன்றையும் கவனியாது இருக்குமாறு வவுனியா எம். பியிடம் கூறினர். இந்த இரு பிரதிநிதிகளும் சில நிமிடங்கள் எங்களுடன் பேசிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டார்கள். எங்களை எவ்வளவோ ஏசியும் கேலி செய்தும் நாங்கள் எதுவுமே கூருது, அமைதியாக அமர்ந் திருந்தமையால், அக்கூட்டத்தினர் ஏமாற்றமடைந்தார் கள். அதனுல், சத்தியாக்கிரகிகளாகிய நாங்கள் பிடித்துக் கொண்டிருந்த சுலோக அட்டைகளைப் பலாத்காரமாகப் பறித்து எடுத்து, காற்றில் வீசினர்கள். அப்போதும் சத் தியாக்கிரகிகள் மௌனம் சாதித்தனர். ஏமாற்றத்தால் பாதிக்கப்பட்ட அக்கூட்டத்தினர் சத்தியாக்கிரகிகளி டையே புகுந்து, மத்தியில் சிங்கக் கொடியை நாட்டி விட்டு, அதனைச் சுற்றி நடனமாடினர்.

''இந்நிகழ்ச்சியாலும் சத்தியாக்கிரகிகள் தமது மௌ னத்தைக் குலைக்கவில்லை. அதனுல், அக்கூட்டத்தினர் செல் வநாயகம், பொன்னம்பலம், சுந்தரலிங்கம் ஆகியோர் குறித்துப் பேசத் தொடங்கினர். 'இவர்கள் மூவரும் சிங்கள மக்களின் எதிரிகள்; தமிழ்மக்கள் சிங்கள மக்களின் சகோதரர்கள்' என்றனர். இங்கு சத்தியாக்கிரகம் செய்ய வந்துள்ளவர்கள், இத்தலைவர்களால் தவருன பாதையில் வழி நடத்தப்பட்டுள்ளனர் என்றனர், எவ்வளவு பேசியும் ஏசியும் நாம் அமைதி இழக்கவில்லை. எனவே, எங்களைத் தாக்கத் தொடங்கினர்கள். தென் மேற்கு மூலையிலிருந்த சத்தியாக்கிரகிகளே முதலில் தாக்கப்பட்டார்கள். சாவ கச்சேரிப் பிரதிநிதி நவரத்தினம் முதலில் கூட்டத்தின ரால் தாக்கப்பட்டு நிலத்தில் சரிந்தார். அவரைச் சிலர் ஏறி மிதித்தனர். இன்று அவர் ஆஸ்பத்திரியிலுள்ளார் அதனை அடுத்து பொத்துவில் பிரதிநிதி முஸ்தபா, தாக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். எனக்குப் பக்கத்திலிருந்த ஒருவரின் காது கடித் தெடுக்கப்பட்டது—''

''காதின் ஒரு பகுதி—'' என பீற்றர் கெனமன் திருத்தம் செய்தார்.

''ஆம், ஒரு பகுதிதான். அடுத்து அக்கூட்டத்தினரின் கவனம் என் மீது திரும்பியது. காதின் ஒரு பகுதி கடிபட்டதும், யாரோ ஒருவர் சொன்னார்; 'இது புத்த ஜயந்தி ஆண்டு' என்று கூட்டத்திலிருந்த ஒருவர் சொன்னார்; 'இவர்கள் யாழ்ப்பாணம் போனால் இவர்களை ஒன்றும் செய்ய முடியாது; என்று., அக் கூட்டத்தினரில் ஒருவர் ஓங்கி என் கன்னத்தில் அறைந்தார். அவர்களில் ஒருவருக்கு 'சிங்கள ஆண்டுவ' விலும் பார்க்க, என் கையில் கட்டியிருந்த கைக் கடிகாரத்தில் நாட்டம் விழுந்தது. பறித்தெடுத்துக் கொண்டார். அத்துடன் சிங்கக் கொடி பறந்த மூங்கில் கழியை இரண்டாக உடைத்து அவர்கள் சத்தியாக்கிரகிகளில் சிலரை அடித்தார்கள். என் தோள்களிலும் மூங்கிலடி விழுந்தது. 'பேர்ஸ் என நினைத்து என் சேர்ட் பையிலிருந்த கண்ணாடிக் கூட்டை ஒருவன் பறித்தெடுத்துக் கொண்டான். என்னை அவ்விடத்திலிருந்து கொற இழுவையாக இழுத்துச் செல்ல முயன்றார்கள்.

''இச் சந்தர்ப்பத்தில் இன்னொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட விரும்புகின்றேன். காங்கேசன்துறைப் பிரதிநிதி (திரு. செல்வநாயகம்) யின் மகன் சத்தியாக்கிரகிகளில் ஒருவராகக் கலந்து கொள்ளவில்லை. அப்படியிருந்தும் அவர் எங்களைக் காலி முகத்திடலுக்கு காரில் அழைத்து வந்த காரணத்துக்காக அப் பதினெட்டு வயதுப் பையன் கடுமையாகக் காடையர்களால் தாக்கப்பட்டார். அக்கூட்டத்தினரில் ஒருவன் மடியிலிருந்த கத்தி ஒன்றினை எடுத்து விரித்து; 'நீங்கள் எல்லோரும் இங்கிருந்து எழுந்து போகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால், குத்திக் கொல்லுவோம்' என எச்சரித்தான். தனது சகோதரனைக் காப்பாற்ற முயன்ற திரு. செல்வ நாயகத்தின் இரண்டாவது மகனும் கடுமையாகக் கூட்டத்தினரால் தாக்கப்பட்டார்.

''பெரும்பாலான சத்தியாக்கிரகிகள் டொக்டர்கள், புரக்டர்கள், அட்வோகேற்றுக்கள், ஆசிரியர்கள், அதிபர்கள். எல்லாரும்கடுமையாகத் தாக்கப்பட்டார்கள் பொலீசாரின் கண்முன் இந்தத் தாக்குதல்கள் ஒருமணி நேரம் நிகழ்ந்தது. பொலீசார் எதுவுமே செய்யவில்லை. இது முறைப்பாடல்ல. பொலீசார் எங்களைக் கைது செய்வார்கள் அல்லது இம்சிப்பார்கள் என்றே நாம் எதிர்பார்த்தோம். ஆனால், வந்த கூட்டத்தினரே எங்களைத் தாக்கினார்கள். நாம் எந்தவிதமான தாக்குதல்களையும் ஏற்கத் தயாராகவே இருந்தோம்.

''ஒருமணி நேரத்தின் பின்னர் பொலிசார் எங்களைச் சூழ்ந்து நின்றார்கள். அவ்வேளையில் தான் திருகோணமலை, மட்டக்களப்புச் சத்தியாக்கிரகிகள் வந்து சேர்ந்தார்கள்' மெயில் றெயின் வழமைபோலத் தாமதமாகவே வந்ததே காரணமாகும். ஊர்காவற்றுறை எம். பி. கந்தையா, வட்டுக்கோட்டை எம். பி. அமிர்தலிங்கம், திருகோணமலை எம். பி. இராஜவரோதயம் ஆகியோர் சத்தியாக்கிரகிகளை வரவேற்று அழைத்து வரச் சென்றிருந்தார்கள் அதே றெயினில் தான் மட்டக்களப்பு பிரதிநிதி இராசதுரையும் வந்திருந்தார். எல்லாரும் நடந்து, காலிமுகத்திடலுக்கு வந்தார்கள். அவ்வேளை கடும் மழை வேறு பொழியத் தொடங்கியது. பொலீசார் எங்களைச் சூழ்ந்து நின்றதால், அவர்கள் தாக்கப்படவில்லை, என்பதிலும் கடும் மழை பெய்ததால், தாக்கிய கூட்டத்தினர் விலகிச் சென்றமையே மெய்க்காரணமாகும் அவர்கள் வந்து எங்களுடன் அமர்ந்து கொண்டார்கள். அதே வேளை எங்கள் மீது கற்களும், செங்கற்களும் வந்து விழத் தொடங்கின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைச் சூழ்ந்து நின்ற பொலிசாரின் தோள்களின் மேலாகக் கற்கள் வந்து எங்களைத்தாக்கின. என் நாடியையும் என் பின் தலையையும் கற்கள் தாக்கின அமிர்தலிங்கம் கற்களால் தாக்கப்பட்டார்.

"பொலிசார் ஒருவரும் கல்லடிக்குட்பட்டார். இன்ஸ்பெக்டர் ஜெனரலின் காரும் கற்களால் தாக்குண்டது. இவை ஒன்றும் பெரிதல்ல. ஆனால், பொலிசாரில் ஒருவரைத் தமிழரென அடையாளம கண்டு கொண்ட கூட்டம் அவரைத் தாக்கியது. தொழிற் திணைக்களத்திலிருந்து திரும்பிவந்து கொண்டிருந்த நான்கு அரச ஊழியர்களையும் அக்கூட்டத்தினர் தாக்கினர். பொலிஸ் கான்ஸ்டபிள் தாக்கப்பட்டதும் தான் பொலிசாருக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணம் வந்தது தாக்கிய ஒருவனைக் கைது செய்தனர் பொலிஸ் அதிகாரியிடம் அக்கூட்டத்தினர், 'சேர், நீங்கள் ஒரு சிங்களவர் நாங்கள் தமிழரைத் தாக்குகிறோம். நீங்களுமேன் ஒரு சிங்களவராக நடந்து கொள்ளக் கூடாது.?' என்றனர் இன்ஸ்பெக்டர் மறுக்கவே அக்கூட்டத்தினர் அவரைத் துரத்திச் சென்றனர். அவர் தொழிற் கந்தோருக்குள் ஓடிப்புகுந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். அதன் பிறகே பொலிசார் குண்டாந்தடியடிப்பிரயோகம் செய்து கூட்டத்தினரைக் கலைத்தனர். நண்பகல் ஒருமணியளவில் சத்தியாக்கிரகத்தைப் பூர்த்தி செய்து கொண்டோம்.

"பெரும் சாம்ராஜ்யங்களுக்கும் சிறிய அல்லது அற்பமதியினருக்கும் வழிப்படாது என்று மெக்கோலாய் பிரபு சொன்னார் என்று நான் நம்புகிறேன். பெரியசாம்ராஜ்யங்களிருக்கட்டும்; ஆனால், சின்னத் தேசங்களில்கூட தாராள மனப்பான்மை தேச அபிமான அடிப்படையில் இல்லாமல் – அரசியல் வாதிகளாக நடத்தால் என்ன நடக்கும் என்பதை இந்த மசோதா நன்கு எடுத்துக் காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. எங்கள் கௌரவ பிரதம மந்திரி எல்லாவிதத்தி லும் தேசிய மனப்பான்மையுடன் இராஜியவாதியாக நடந்து கொள்ளத் தெரியாதவர் என்று நான் சொல்ல வில்லை. ஆனால், இந்த நாட்டிலேயுள்ள மேத்தானந்தாக் கள், ஜெயசூரியாக்கள். 'எக்சத் பெரமுன' புத்த குருக் கள், - அது மட்டுமல்ல சாதாரண காடையார்கள் கையிற் கூட எங்கள் பிரதமர் சிக்கிக் கொண்டதாக நான் எண்ணுகின்றேன். இதற்கு முன்னர் எப்பொழுதா வது அரசாங்கப் பாராளுமன்ற கட்சியிலே அங்கத்தின ராக இல்லாத எவராவது - அதுவும் உத்தியோக பூர்வமாக இல்லை - ஆனால், சாதாரண மனுசன் என்ற முறையிலே யாராவது புத்திமதி கூறி வந்ததாக எப்பொழுதாவது கேள்விப்பட்டதுண்டா? அல்லது ஒருவர் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறார் என்பதற்காக ஒரு மசோதாவிலுள்ள சரத்துக்கள் திருத்தப்பட்டதை யாராவது கவனித்ததுண் டா? கொழும்பில் ஒருவர் உண்ணாவிரதம் இருந்தால், அவ ரொரு சிங்களப் பேராசிரியராக இருந்தால் அதைப்பற்றி அக்கறைப்படுவது வழக்கம். ஆனால், யாழ்ப்பாணத்தில் இந்த மொழிப் பிரச்சினை சம்பந்தமாக தம்பு இரத்தினம் என்பவர் ஐம்பது நாட்களாக தமிழ் மொழிக்கு அரசியல் அந்தஸ்து வேண்டுமென்று உண்ணாவிரதமிருந்தார் அதைப் பற்றி பிரதமருக்குத் தந்தி அனுப்பியிருந்துங்கூட சிறிதும் அதைப்பற்றி கவனிக்காத அரசாங்கந்தான் இது.

''இந்த உண்ணாவிரதம் இருந்த பேராசிரியர் எவ்விதம் நமது நாட்டிலே சமஷ்டி அரசியல் அமைக்கப் பட வேண் டும் என்றும், அவ்விதம் ஒரு எதிர் அரசாங்கத்தை நிறுவ லாம் என்றும் தமிழ் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு 1947, 1948-ல் எவ்வித யோசனைகள் கூறினார் என்பதை நான் திரும்ப எடுத்துக் கூறுவேன். அது மட்டுமல்ல தெருவில் கூடிய சனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் என்று சொல்கிறவர்கள் 'நீங்கள் சத்தியாக்கிரகிகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கொஞ்சமும் பயப்பட தேவையில்லை. எனக் குறிப்பிட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். சத்தியாகிரகிகளைப் பற்றி எதுவும் இருநூறு முந்நூறு பேர்களைக் கொண்ட நிராயுதபாணிகளாகிய சத்தியாக்கிரகிகளைப் பற்றி ஏன் பயப்படவேண்டும்? இவர்கள் கோல்பேஸ்திடலில் தாக்கினாலும் உதைத்தாலும் அமைதியாக இருந்து சத்தியாக்கிரகத்தை நிலை நாட்டினார்கள் என மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இவர்களை அவர்கள் ஏசினாலும் ஒன்றும் திரும்பிப் பதில் கூறாமல் இருந்தார்கள். அப்படி இருப்பவர்கள் அடித்தாலும் அடிபட்டார்கள். அவ்விதம் நடப்பவர்களுக்கு ஏன் பயப்பட வேண்டும்? நேற்றுப் பேசியபோது தபால் அமைச்சரின் பாராளுமன்றக் காரிய தரிசி அவர்கள் இந்தச் சபையில் குறிப்பிட்டார்கள் ''இது சத்தியாக்கிரகமல்ல. ஆனால், தமிழர்களின் படையெடுப்பு'' என்று. 'இந்தப் படையெடுப்பு' பற்றி மகாத்மாகாந்தியடிகளுடைய சிஷ்யர்களில் ஒருவரான ஆச்சாரிய கிருபாளனி எவ்விதம் சத்தியாக் கிராகிகளை நடத்த வேண்டுமென்று தன்னைக் கேட்ட ஒருவருக்குப் பின் வருமாறு கூறியிருக்கிறார். 'தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துக் கோரி சத்தியாக்கிரகஞ் செய்வதாயிருந்தால் அதை நாமும எப்படிச் சமாளிக்க முடியும். என்பதைப் பற்றிச் சிங்களக் கனவான் ஒருவர் என்னைக் கேட்டார். சிறுபான்மையோர் தங்களின் உண்மையான குறைகளுக்காகவே சத்தியாக்கிரகம் செய்தால், அதை எதிர்த்துச் சத்தியாக்கிரகிகள் செய்வது சரியல்ல, பெரும் பான்மையோர் சிறுபான்மையோருக்கு நீதி வழங்குவது தான் சரி. இவ்விதம் செய்த பின்னும் அவர்கள் சத்தியாக்கிரகம் செய்தால் அது அவர்களையே பாதிக்கும்'' குறைகளுக்காகத் தன்னைத் தானே வருத்திக் கொள்வது சத்தியாக்கிரகம் என்பதன் அர்த்தம் அந்தக் காரணம் அநீதியானதாக இருந்தும் அது தானாகவே அழிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யூன் மாதம் 5 ஆந் திகதி எங்கள் சரித்திரங்களில் பொறிச்கப்பட வேண்டிய தினம் போலிருக்கின்றது, 1915 ஆம் ஆண்டிலே யூன் மாதம் 5 ஆம் தேதி இராணுவச் சட்டம் நிறுத்தப்பட்டு, சமாதானம் நிலவியது. 1947 ஆம் ஆண்டு யூன் 5 ஆந் தேதி எங்கள் தொழிலாளர் நலவுரிமைகளுக்காகப் போராடுவதற்கு, தொழிலாளர் சங்கம் அமைப்பதற்கு, தன்னைத் தியாகம், செய்த கந்தசாமி அவர்கள் உயிர் துறந்தார். கந்தசாமி அவர்களுக்கு ஒரு ஞாபகச் சின்னம் நிறுவப்பட்டது. அவர் ஒரு தமிழர் என்ற முறையிலல்ல. தொழிலாளர் சங்க நலனுக்காகப் போராடினார் என்பதற்காக அவரை ஞாபகப்படுத்த நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. அது என்ன மாதிரியாக நமது சிங்களச் சகோதரர்களுக்குக் கோப மூட்டியதோ நான் அறியேன். சத்தியாக்கிரகிகள் ஒரு வேளை கோப மூட்டலாம். இந்தச் சிலை எப்படிக் கோபமூட்ட முடியும்? யூன் 5 இல் அந்த ஞாபகச் சின்னத்தை உடைத்தெறிந்தார்கள். இத்தினம் எங்களுக்கு ஒரு முக்கியமான நாள். தமிழை ஒதுக்கி இந்த மசோதாவை இச் சபையிற் கொண்டுவந்து நிறை வேற்றினுல், அது ஒற்றையாட்சிக்குச் சாவுமணி அடிப்பதாயிருக்கும் என்பதை நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன். அது மட்டுமல்ல, இந்த மசோதா நிறைவேறினுல், எங்களுக்கு ஒரு தனி அரசு அது சுதந்திரமுள்ள தனி அரசா அல்லது சமஷ்டியுள்ள சமஷ்டிக்குட்பட்ட தமிழரசா என்பது இனிமேல் வருகின்ற காரியங்கள் பலவற்றைப் பொறுத்திருக்கும். ஆனுல், தனியரசு ஒன்று வருவதற்கு உத்தரவாதமிட்டதே இந்தச் சட்டம் என்பதை நான் கூறுகின்றேன்.

"பாராளுமன்றத்துக்கு வெளியே நாங்கள் சத்தியாக்கிரகம் நடாத்தியதன் பலனுக எத்தனையோ காரியங்களைச் சாதித்துள்ளோம். முதலாவதாக இந்தச் சத்தியாக்கிரக இயக்கத்தின் மூலம் வெளிநாடுகள் அனைத்துக்கும் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மக்கள் இந்த மசோதாவை இறுதிவரை எதிர்ப்பார்கள் என்பதை காட்டியிருக்கின்றோம். இந்தச் சத்தியாக்கிரகம் மூலம் என்ன கஷ்டம் வந்தாலும் தமிழ் பேசும் மக்கள் விடுதலையடைவதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம் என்பது புலனாகிவிட்டது.

''சத்தியாக்கிரகிகளாகிய எங்களைச் சாதாரண பொலீசார் கைது செய்தோ அல்லது கண்ணீர்ப்புகை விட்டுத் செலுத்தித் துரத்தியோ ஏதாவது செய்திருந்தாலும், சத்தியாக்கிரகம் செய்யும் இடத்திலேயே விட்டிருந்தாலும் எங்கள் இயக்கத்திற்கு இவ்வளவு பிரபல்யம் இருக்க முடியாது. காடையர்கள் எங்களைத் தாக்கினார்கள். தாக்கத்திற்குப் போதிய பலன் கிடைத்தது. சத்தியாக்கிரகத்தை ஒரு பரிசோதனை வழியாகக் கொண்டோம். சாதனையில் நாங்கள் வெற்றி கொண்டுள்ளோம். நாங்கள் இந்த அரிய சாதனை மூலம் எதிரேயுள்ளவர்களின் இருதயத்தைக் தொட்டுவிட்டோம் என்று சொல்லவில்லை. அவர்கள் எங்களில் அனுதாபத்தோடுதான் இருக்கிறார்கள். என் பேச்சை முடிப்பதற்கு முன், இன்று நாடெங்கும் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த அரசு யாது நடவடிக்கை எடுத்துள்ளது, எனக் கேட்கின்றேன்...''

கோப்பாய்ப் பிரதிநிதி வன்னிய சிங்கம் தனது நீண்ட உரையை நிறைவு செய்துவிட்டு இருக்கையில் அமர்ந்தார். அவர் இறுதியில் கூறிய செய்திகள் நாகராசனின் மனதில் கலக்கத்தைத் தோற்றுவித்தன.

இருக்கையை விட்டு எழுந்து வெளியே விரைந்து வந்தான்.

நேரம் இரவு 7-30 மணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

கொட்டாஞ்சேனையில் பஸ்சில் ஏறி அமர்ந்த பின்னரும் சுரேந்திரனுக்குப் பதற்றம் முற்றுக நீங்கவில்லை. வழியில் அவன் கண்ட காட்சிகள் கலக்கத்தைக் கொடுத்தன.

வீதியில் நடந்துவந்து கொண்டிருந்த தமிழரைச் சிங்களக் காடையர்கள் கொடூரமாகத் தாக்கினார்கள். கொல்கின்ற நோக்கம் இருக்காது விடினும், எதற்கோ பழி வாங்கும் தவறான வெறி அவர்களிடம் காணப்பட்டது. கரங்களாலும் தடிகளாலும் மாறிமாறி அடித்து கால்களாலும் உதைத்ததை அவன் கண்டான். ஓட ஓட விரட்டி அடித்தார்கள். சிலரின் மண்டைகள் உடைந்து, இரத்தம் வழிந்தது

''சத்தியாக் கிரகமா செய்யிறியள்? சிங்களவர்களுக்கு எதிராகப் படையெடுப்போ நடத்துறியள்... ஜெயவீவ அப்பே ஆண்டுவ...''

பஸ்ஸினுள் அவனைப்போல பல தமிழர் காணப்பட்டனர். முகங்களில் பயப்பிராந்தி. இவ்வளவு காலமும் நிகழாத துர்பாக்கிய சம்பவங்கள் இன்று நிகழத் தொடங்கிவிட்டன.

தென்னிலங்கையில் தமிழருக்கு விழுகின்ற முதலடி இதுதான்.

''யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகம் செய்துவிட்டு இருக்கலாமே? ஏன் கொழும்புக்கு வந்தவங்கள்...''

''தமிழனுக்கு அடித்தால் திருப்பி அடிக்க மாட்டான் என்பதைக் காட்டிக் கொடுத்திட்டான்கள்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்சினுள் மெதுவாகச் சிலர் தமது வழித்தெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்கள். சுரேந்திரன் பஸ் யன்னலூடாக வெளியே பார்த்தான்.

தமிழரின் சில கடைகள், காடையர்களால் கொள்ளையிடப்பட்டன. பொலீஸார் பார்த்திருக்க அக்கடைகளில் பொருட்களை ஒவ்வொருவரும் வாரி எடுத்துச் செல்வதைக் கண்டான்.

ஒரு சந்தியில் கும்பலாக நின்று தம்மிடம் அகப்பட்ட ஒரு தமிழனைத் தாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

பஸ் துறைமுக வீதியால் ஓடித் திரும்பிய போது பெருங் கும்பல் ஒன்று பஸ்சை மறித்தது. பஸ் நிறுத்தப்பட்டது.

''பறத் தெமுளு ஒக்கம பயின்ட பஸ்சிலுள்ள பறைத் தமிழர் எல்லோரும் இறங்கு'' என ஒருவன் கட்டளையிட்டான்.

''ஒக்கொம சிங்கள மினிசு... எல்லோரும் சிங்களவர்கள்'' எனக் கூறி பஸ்சை எடுப்பதற்கு டிரைவர் முயன்முன்.

''இவர்களெல்லாம் துறைமுகத் தொழிலாளர்கள்''... என ஒருவர் முணுமுணுத்தார்.

டிரைவரை நம்பாத இருவர் பஸ்சினுள் ஏறினர். சுரேந்திரனை மரண பயம் கவ்விக் கொண்டது. ஏறியவர்களைப் பயத்துடன் பார்த்தான். அவர்களில் ஒருவன்—

விஜயபால; சோமாவின் அண்ணன்.

நிச்சயமாக இன்று அவன் உயிரோடு திரும்பப்போவதில்லை. விஜயபாலவிற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. விடமாட்டான். அடித்தால் திருப்பி அடிக்காமல் விடுவதில்லை. சாவதற்கு முன் ஒருவனை முடிக்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவதில்லை. என திடீரென சுரேந்திரன் மனதைத் திடப் படுத்திக் கொண்டான்.

''நீ இறங்கு நீ இறங்கு ..'' என்று தமிழரை அடையாளம் கண்டு இறங்கச் சொன்னார்கள். தயங்கியவர்களின் பிடரிகளில் அறைந்து இறக்கினார்கள்.

ஒருவன் சிலரின் தலையை முகர்ந்து பார்த்தான். நல்லெண்ணெய் மணத்தால், ''இறங்கடா'' என்றான். சிலவேளை காதுகளை இழுத்துப் பார்த்தான். கடுக்கன் போட்டதுளைகள் தெரிந்ததால் ''இறங்கடா'' என்றான்.

கீழே இறங்கியவர்களைக் கீழே நின்றவர்கள், தாக்கத் தொடங்கினார்கள்

விஜயபால சுரேந்திரனை நோக்கி வருகின்றான்.

''ஏன் இப்படி அநியாயம் செய்கிறீர்கள். இந்த அப்பாவித் தமிழர் உங்களை என்ன கேட்டார்கள்?'' என்று ஒரு சிங்களக் கனவான், விஜயபாலவைக்கேட்டார்.

''நீர் சும்மா இரும். தமிழருக்காகப் பேசினால் உமக்கும் அதுவே நடக்கும்'' என்று விஜயபால உறுமினான். சில தமிழரை இறக்கித் தள்ளி விட்ட விஜயபால சுரேந்திரனைக் கண்டான்.

''நீயா ...?''

சுரேந்திரன் தானாகவே எழுந்து நின்றான் விஜயபாலவின் விழிகள் சில கணப்பொழுதுகள் அவனில் நிலைத்தன. அவனது முகத்தில் பரவிய உணர்ச்சிகளைச் சுரேந்திரனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''பயின்ட... இறங்கு '' என்றான், விஜயபால. சுரேந்திரன் 'சீற்'றிடைபால் வெளியே வர முயல, ''எப்பா... வாடிவென்ன.! வேண்டாம், நீ இரு...'' என்றான் விஜயபால.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்திரனால் நம்பவே முடியவில்லை. நிம்மதிப் பெரு மூச்சுடன் 'பொத்'தென அமர்ந்து கொண்டான். வெளியே தாக்கப்பட்டவர்கள் அலறுவது கேட்டது.

வீதியில் உருட்டி உருட்டி அடித்தார்கள்.

''ஐயோ... அம்மா...'' என்று ஓலமிட்டார்கள். பத்து நிமிடம் வரை தாக்குதல் நடந்தது.

''அத்தி... அத்தி... காணும், காணும் விடுங்கள்...'' என்று எவனோ கட்டளையிட்டான்.

தாக்குதல்கள் நின்றன. அடி உதை பட்டவர்கள், பஸ்சில் விழுந்தடித்து ஏறினார்கள். ஓரிருவரைத் தூக்கி, ஏற்றிவிட்டார்கள். இரத்தக் காயங்கள்... முகம் வீங்கி... பற்கள் உடைந்து... கைகால் முறிந்து... உடைகள் கிழிந்து... பொருட்களைப் பறிகொடுத்து...

சுரேந்திரனின் மனம் கனத்தது.

## 16

இரவு 11 மணி.

நாகராசன் இன்னும் அறைக்குத் திரும்பி வந்து சேர வில்லை. சுரேந்திரன் கவலையோடு அவன் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தான். என்ன நடந்ததோ?

கொழும்பில் இனக்கலவரம் வெடித்திருந்தது. தமிழர் கள் கண்ட இடங்களில் மோசமாகத் தாக்கப்பட்டதுடன், பொருட்கள் சூறையாடப்பட்டன.

நாகராசன் எங்காவது காடையர்களிடம் அகப்பட்டுக் கொண்டானோ? நினைவு உள்ளத்தைப் பிழிந்து இதயத்தைக் கசக்கியது. கட்டிலிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்திருந்தான். படுத்திருக்க முடியவில்லை. அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

அறை யன்னலுக்கு அப்பால், அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் கடல். வானில் அரை நிலவு தொங்கிக் கொண்டிருந்தது. இரவு பறவை ஒன்று மேற்கிலிருந்து கிழக்காகத் தனித்து, நிலவில் குளித்து, காற்றில் மிதந்து சென்றது.

நாகராசனுக்கு என்ன நடந்தது?

அவன் வேலை செய்யும் பத்திரிகைக் காரியாலயத்திற்குப் 'போன்' பண்ணிப் பார்த்தால் என்ன? வீதிகளில் நடைபெறும் வன் செயல்களை அறிந்து, வீடு திரும்பாது அலுவலகத்திலேயே தங்கியிருக்கலாம்.

மாடியை விட்டுக் கீழே இறங்கிச் சென்று பத்திரிகைக் காரியாலயத்திற்குரிய தொலைபேசி இலக்கங்களைச் சுழற்றினான்.

''நாகராசனா? அவர் பின்னேரமே இங்கிருந்து புறப்பட்டு விட்டாரே?'' — என்ற தகவல்தான் கிடைத்தது. துயரத்தின் சுவடுகள் விசுவரூபமெடுத்து உடலெங்கும் பரவின.

வன்செயற் செய்திகள் சேகரிக்க அவன் நகரெங்கும் அலைகின்றானோ? செய்தி சேகரிக்கின்ற நேரமா இது?.

வீதிகள் தோறும் வெறி நாய்கள் அலைகின்றன. எங்கு அகப்பட்டுக் கொண்டானோ?.

மீண்டும் கட்டிலில் விழுந்தான்.

சோமாவின் நினைவு எழுந்தது.

'சோமா... சோமா...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைச் சந்தித்து இரண்டு நாட்களாகின்றன. இரண்டு யுகங்கள் போலப்படுகின்றது.

''சுரேன்...''

அவன் காதுகளில் சோமாவின் உதடுகள் உச்சரிக்கும், அவன் பெயர் அழைப்பு, இனிய நாதமாகக் கேட்கின்றது.

எவ்வளவு இனிமையான பெண்? அவன் மீது அவள் உயிரையே வைத்திருக்கிறாள்.

அவள் இனத்தைச் சேர்ந்தவர்களா, இன்று தமிழர்களை வீதிகளில் கடித்துக் குதறுகிறார்கள்? அவளுடைய தமையனே அவர்களில் ஒருவனாக நின்றானே?.

ஏன் அவனை மட்டும் அவன் தாக்கவில்லை?

தன் தங்கையின் காதலன் என்பதாலா?

நேரம் இரவு 12 மணி. நள்ளிரவு.

நாகராசன் இன்னமும் வரவில்லை.

அதிகாலை வேளையில் அவனை அறியாமலேயே அவனைத் தூக்கந்தழுவியது. தூக்கம் கலைந்த போது கீழேயிருந்து அழைத்தார்கள்.

அவர்கள் அழைப்பில் தான் அவன் தூக்கம் கலைந்திருக்க வேண்டும். துடித்துப் பதைத்து எழுந்திருந்தான். எழுந்ததும், நாகராசனின் கட்டில் வெறுமையாக இருப்பது கண்களில் பட்டு ஏக்கத்தைக் கொடுத்தது.

சேர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டு, கீழே இறங்கிச் சென்றான். அவனுக்குத் தொலைபேசி அழைப்பு வந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகராசன் வேலை செய்யும் பத்திரிகைக் காரியால யத்திலிருந்து வந்திருந்தது.

"நாகராசன் கொழும்பு ஜெனரல் ஹொஸ்பிற்றலில் அட்மிட் பண்ணப் பட்டிருக்கிறார்..."

செய்தியின் தாக்கத்தைச் சில கணங்கள் அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. இடிந்துபோய் அப்படியே அமர்ந்து விட்டான்.

"இப்ப வெளியில் போக முடியாது... இன்னமும் கலவரம் ஓயவில்லை. இப்பகூட, யாழ்ப்பாணத்திலிருந்து வந்த யாழ்தேவியிருந்து தமிழரை இழுத்து 'போர்ட்' ஸ்ரேசனில் தாக்குகிறார்களாம். ஹொஸ் பிற்றலுக்கு போன்பண்ணிக் கேட்போம்... நிலைமை எப்படி என்று..." என்றனர் அங்கிருந்த சிலர்.

சுரேந்திரன் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றான்; முடிய வில்லை; 'லைன்' செத்துக்கிடந்தது!

"பின்னேரம் தான் போகலாம்."

கட்டிலில் வந்து துயரத்துடன் விழுந்தான்.

வெளியே வானம் திடீரென இருளத் தொடங்கியது. தென்மேல் பருவக் காற்றின் ஈரம்மிக்க வளிக்கரங்கள் யன்னலூடாகப் பிரவேசித்தன.

பருவ மழை பொழியப்போகின்றது.

வானில் கிளைவிட்ட மின்னல், மழைத் தாரைகளுக்கு அழைப்புவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

7 ஜூன், 1956. பிற்பகல் 3.41 மணி. கொழும்பு மத்தி பாராளுமன்ற உறுப்பினர் பீற்றர் கெனமன், பாராளுமன்றத்தில் கம்பீரமாக எழுந்து நின்றார். பாராளுமன்றத்தில் பிரகாசமாக ஏற்றப்பட்டிருந்த மின்விளக்குகளின் ஒளியில், அவரின் செந்நிறத்தோற்றம் தனிச் சோபையுடன் விளங்கியது.

"...பாராளுமன்றத்தின் முன்பும், கொழும்பு நகரின் ஏனைய பகுதிகளிலும் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் கேவலமான, இழிவான சம்பவங்கள் குறித்து, கௌரவ பிரதம மந்திரியின் கவனத்தை இழுக்க விரும்புகின்றேன். நீதியின் முன் அனைவரும் சமனானவர் எனப் பிரதமர் குறிப்பிட்ட உரையின் தாற்பரியத்தை எண்ணிப் பார்க்கும் போது, இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் அதற்கு முற்றிலும் மாறானவையாக உள்ளன. நான் கண்டவற்றையே இங்கு எடுத்துக் கூறவுள்ளேன். வேறொரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வீதிகளில் அவர்களைத் தாக்கும் வெட்கப்படத்தக்க தலைகுனியவைக்கும் காட்சிகள் நாடெங்கும் இன்று, நடந்து கொண்டிருக்கின்றன.

"எனதுதொகுதியிலுள்ள தமிழ் மக்கள் தாக்கப்படுகிறார்கள். அவர்களது கடைகள், சொத்துக்கள் என்பன சூறையாடப்படுகின்றன என்று செய்திகள் எனக்கு அறியத் தரப்பட்டுள்ளன. 'அது ஒரு தமிழனா? என்று கேட்டு வீதிகளில் காடையர்கள் தாம் ஒரு பெரிய மெச்சத்தக்க செயலைப் புரிவதாகக் கருதித் தமிழரைத் தாக்குகிறார்கள். ஏராளமானோர் காயமடைந்துள்ளார்கள். இவ்வளவு நடந்தும் பொலீசார் நடந்து கொள்ளும் முறைகள், நீதியைப் பாதுகாக்கும் செயல்களாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் கண்ட ஒரு காட்சி. ஒரு தமிழ் மனிதர் வீதியில் நடந்து சென்றார். அவரைச் சிங்களவர் தாக்கினர். அவ்வேளை அங்கு வந்த பொலீசார், தாக்கப்பட்ட தமிழரைத் தமது பொறுப்பில் கூட்டிச் சென்றனர். அவரைத் தாக்கியவர்கள் வீதியில் நின்றனர். தாக்கப்பட்டவர் பொலீஸ் பாதுகாப்பில்? இது என்ன நீதி? யார் சட்டத்தைக் குலைத்தார்கள்? யார் சமாதானத்தைச் சீரழித்தார்கள்? இது அரசாங்கக் கொள்கைகளில் ஒரு பகுதியா? பிரதமர் தான் பதில் கூற வேண்டும்.

"பொலீசார் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தமிழ் மக்கள் தாக்கப்படுகிறார்கள்.

"இன்னொரு சம்பவத்தையும் இங்கு கூறவிரும்புகின்றேன். நானும், அக்குரச எம். பி. டாக்டர் விக்கிரமசிங்கவும் பாராளுமன்றத்திற்கு வந்து கொண்டிருக்கும் போது, லேக்கவுசுக்கு அருகில், சோடாப் போத்தல்களை வண்டிகளில் ஏற்றிக் கொண்டுவந்த ஓர் ஏழை தமிழ்க்கிழவர் தாக்கப்பட்டத்தைக் கண்டோம். காடையர்கள் அவரைத் தாக்கியதோடு நில்லாது, சோடாப் போத்தல்களையும் அடித்து உடைத்தெறிந்தார்கள்! இந்தச் செயலகத்திலிருந்து வெளியேறிய தமிழ் லிகிதர்கள் தாக்கப்பட்டார்கள். ஒருவரைக் காடையர்கள் தூக்கிப் பெய்ரா ஏரியில் எறிந்தார்கள். சமஷ்டிக் கட்சியினரின் கொள்கைகளை நான் அங்கீகரிக்கவில்லை, அமைதியான முறையில் பாராளுமன்றத்தின் முன் கூடி அமர்ந்ததில் என்ன சட்டவிரோதம் இருக்கிறது? ஆனால், ஒன்று கூடி கல்லெறிந்து தாக்கியது எதுவிதத்திலும் சட்டரீதியான செயலன்று!

"இலங்கைப் பல்கலைக்கழகப் பொருளாதார விரிவுரையாளர் எஃப். ஆர். ஜயசூரிய என்பவர், உண்ணாவிரதமிருந்தார். 'இன்னும் ஆறு' மாதங்களுள் இலங்கையைத் தென் இந்தியாவின் ஒரு பகுதியாக மாற்றிவிடப் பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல்கிறார்' என அவர் பத்திரிகைகளுக்கு அறிக்கையும் விட்டார். வவுனியா எம். பி. யின் ஆலோசனைப்படி பிரதமர் நடக்கிறார் எனவும் அறிக்கை விட்டார். பிரதமர் அங்கு சென்று'' ஜயசூரியாவிடம் மன்னிப்புக் கோரியதுடன், உண்ணாவிரதத்தைக் கைவிடும்படியும் வேண்டிக் கொண்டார். ஜயசூரியாவின் உயிரைக் காப்பாற்ற விரும்பிய பெருந்தன்மை, இந்த நாட்டின் பிறிதோரிடத்தில் உண்ணாவிரதமிருந்த தப்பு இரத்தினத்தைக் காப்பாற்ற எங்கே போனது? இதுவா ஈக்குவல் ஜஸ்ரிஸ்?' இதுவா சமநீதி?

''கொழும்பு மத்தியிலுள்ள பல கடைகள் திக்கிரையாக்கப்பட்டுள்ளன. பல கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பஸ்களிலிருந்து தமிழ்மக்கள் இழுத்தெடுக்கப்பட்டு தாக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு பிரபல்யமான அப்புக்காத்துமார் கொள்ளுப்பிட்டி சேர்ச்சுக்கு அருகில் தாக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவரின் ஆடை முற்றாகக் களையப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் கொழும்பில் பயத்துடன் வாழ்கிறார்கள்.

''இந்தப் பாராளுமன்றத்திலுள்ள 101 பேரையும் பாதுகாக்க இந்தக் கடடைத்தைச் சுற்றிப் பொலீசார் காவல் நிற்கிறார்கள். நாங்கள் 101 பேரும், எவராலும் தாக்கப்படவில்லை. பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் வீதிகளில் காடையர்களால் தாக்கப்பட்டு இரத்தம் சிந்தும் தமிழ் மக்களாவர்.''

நாட்டில் கிளர்ந்துள்ள இனக் கலவரத்தைப் பற்றி யாழ்ப்பாணப் பிரதிநிதி ஜி. ஜி. பொன்னம்பலம், வவுனியாப் பிரதிநிதி சுந்தரலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். காங்கேசன்துறைப் பிரதிநிதி செல்வநாயகம், கொழும்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய கலவரம் வெளிமாவட்டங்களுக்கும் பரவத் தொடங்கியுள்ளதை எடுத்துக் கூறினர். அம்பாறையில் தமிழருக்கும் சிங்களவருக்குமிடையில் மூண்டுள்ள கலவரத்தை விபரித்தார்.

அவர்களுடைய பாராளுமன்ற உரைகளைக் கேட்டுக் குறிப்பு எடுத்துக் கொண்டு நாகராசன் புறப்பட்டபோது, நேரம் இரவு 7-30.

கோல்பேஸ் கிறீனில் பஸ் எடுத்து, பத்திரிகைக் காரியாலயத்துக்குச் சென்று, செய்திகளை வழங்கிவிட்டு, பம்பலப்பிட்டிக்கு 155 இலக்க பஸ்சில் ஏறிய போது இரவு 8.30 மணி.

அந்த பஸ்ஸைத்தான் மருதானைச் சந்தியில், காடையர்கள் மறித்தார்கள். அந்த பஸ்சில் பயணம் செய்தவர்களில் நாகராசனும் இன்னுமொருவருமே தமிழர்கள். அதனுல், காடையர்கள் அனைவரும் பதம் பார்க்க இருவருமே பயன்பட்டார்கள். பஸ்சிலிருந்து அவர்கள் இருவரையும் இழுத்து வெளியில் எறிந்தார்கள். கும்பலாகச் சுற்றி நின்று அவர்களைக் கைகளாலும் கால்களாலும் தாக்கினர்கள்.

அவர்கள் தாக்கப்படுவதை, மருதானைச் சந்தியில் நின்றிருந்த பொலீசார் பார்த்துக் கொண்டிருப்பதை, நாகராசன் கண்டான்.

அவன் முகம் கன்றி, உதடுகள் உடைந்து இரத்தம் வாயால் கொப்புளித்தது.

'சாகப் போவது நிச்சயம்' என்ற உணர்வு வந்த போது, நாகராசனுக்குப் பயங்கரமான வெறி ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தது. தன்னை மோசமாகத்தாக்கிய காடையன் மீது பாய்ந்து, அவன் குரல்வளையில் வாயைப் பதித்து, 'நறுக்'கென்று துண்டிக்குமாறு தன் பலத்தை பிரயோகித்துக் கடித்தான்.

''அம்மே...'' என்று அலறியவாறு அக் காடையன் சரிய, எவனோ ஒருவன் இரும்புக்கம்பி ஒன்றினால் நாகராசனின் தலையில் ஓங்கி அடித்தான்.

அதன் பிறகு எதுவும் அவனுக்கு நினைவு இல்லை, நடு வீதியில் மயங்கி விழுந்தான். மண்டை பிளந்து இரத்தம், வீதிச்சந்தியைச் செந்நிறமாக்கியது.

## 18

வெட்டி எறிந்த வாழைத்தாராக அவன் கட்டிலில் கிடந்தான். தலையைச் சுற்றிப் பெரியதொரு 'பண்டேஜ்' வலக்கரம் முறிந்திருந்தது, உடலெங்கும் கண்டல் காயங்கள்.

நினைவு வருவதும் போவதுமாக இருந்தது.

கட்டிலின் அருகில் துயருடன் நின்றிருந்த சுரேந்திரனை நாகராசனால் அடையாளம் காணமுடியவில்லை.

''நாகு...'' எனச் சுரேந்திரன் மெதுவாக அழைத்தான்.

''ம்...'' என்ற மெல்லிய ஒரு முனகல்.

இடது கரத்தை அசைத்து, எதுவோ கூற அவன் முயன்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்திரனின் விழிகள் கலங்கின.

அவன் அறையில் அவன், நண்பனாக வாழ்ந்தவன், ஐந்தாண்டுகள் எதுவிதமான மன முறிவுமின்றி வாழ்பவர்கள்.

சுரேந்திரனுக்காக அவன் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறான். அடிக்கடி சுரேந்திரனுக்கு கடுந்தலைவலி வரும். குப்புறப்படுத்துக் கிடந்தபடி துடிப்பான். அவ்வேளைகளில், சுடுநீர் ஒத்தடம் பிடித்து, டிஸ்பிறின் கரைத்துக் கொடுத்து, ஒரு தாயின் கரிசனையோடு அவனை நாகராசன் பேணிப்பார்த்திருக்கிறான்.

''என்னால் உனக்கு எவ்வளவு சிரமம்?''

''போடா... ஒரு நண்பனுக்கு இதுகூடவா செய்யக் கூடாது...?''

அந்த இனிய நண்பன், கடுங்காயங்களுடன் மரணத்திற்கும் வாழ்விற்குமிடையில் போராடிக் கொண்டிருக்கின்றான்.

அன்று இரவும் மறுநாள் முழுவதும் நாகராசனுக்கு அருகிலேயே சுரேந்திரன் நின்றிருந்தான். 'சலேன்' ஏற்றியிருந்தார்கள். அறிவு இடையிலே வருவதும் போவதுமாக இருந்தது.

மூன்றாம் நாள் மாலை, நாகராசன் விழிகளை நன்கு திறந்து அவனைப் பார்த்தான். முகத்தில் தெளிவு. அவனை அன்போடு பார்த்துப் புன்னகைக்க முயன்றான்.

''சுரேன்...'' என்றான் மிகமிக மெதுவாக.

''பாவிகள்... உன்னைப் போய், இப்படி அடித்தார்களே?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைத் தாக்கியவன்ர குரல்வளையைக் கடித்துக் குதறிவிட்டேன் .. சுரேன்..." இவ்வளவும் மிகமிக மெ ¬ வாக, பலவிஞடி நேரக் கழிவில் நாகராசசன் கூறினன்: "அரசியல் வாதிகள் விதைத்த விதைகள்... முளைவிடத் தொடங்கிவிட்டன..."

"ஒன்றும் பேச வேண்டாம்... அமைதியாகப் படுத் திரு. உனக்கு றெஸ்ற் தேவை... மூன்று நாட்களாகக் கண்விழிக்காது கிடந்தாய் .?"

"மூன்று நாளா...?"

"ஓம்..."

சுரேந்திரன் மெதுவாகத் தலையை அசைத்தான்.

"நீ இன்று ஹொஸ்டலுக்குப்போ, சுரேன்... நீ இன்று போய் நல்லாத் தூங்கு..."

உண்மையில் சுரேந்திரனுக்கு ஓய்வான தூக்கம் தேவைப்பட்டது.

"இப்போது வன்செயல் நடக்கிறது?"

"சில சில இடங்களில் .. திடீர் திடீரென..."

"இனி ஒருபோதும் இந்த நாட்டில் இருந்து ஓழியப் போவதில்லை..."

"காலமை நேரத்தோடு வாறன்... நாகு.. கவனமா கப்படுத்திரு."

சுரேந்திரன் விடைபெற்று, ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான்.

கொழும்பு நகர வீதிகளில் கால் பதிப்பதே அச்சந் தரும் உணர்வாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ்சிற்காகக் காத்திருந்தான். தமிழர்களை வீதிகளில் காணமுடியவில்லை. ஏராளமானோர் யாழ்ப்பாணத்திற்கும் – மட்டக்களப்பு - திருகோணமலைக் கும் பாதுகாப்பிற்காகச் சென்று விட்டார்கள்.

ஆஸ்பத்திரிக்கு முன்னால் நடைபாதைக் கடைகள். இந்த வீதிகளில் தமிழ் மக்களை ஓட ஓட விரட்டித் தாக் கியவர்கள், அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தார் கள். லாபாய்... லாபாய்...' என்று குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

நீண்ட நேரக் காத்திருப்பின் பின் பஸ் வந்தது. ஏறிய போது, அவனுடைய ஊரைச் சேர்ந்த நடராசா பஸ்சில் இருப்பது தெரிந்தது வத்தளையில் ஹொட்டல்' ஒன்றை நிர்வகித்து வருகின்றார். அவரை பஸ்சில் அவன் எதிர் பார்க்கவில்லை.

அவர் அருகில் இடமிருந்ததால், அமர்ந்து கொண் டான்.

''நீங்கள் என்ன பஸ்சில் வாறியள்..'' என்று ஒரு பேச்சுக்காகக் கேட்டான்.

''வேறு என்னத்தில் இனி வாறது, தம்பி? என்ர கடையையும் காரையும் கொளுத்திப் போட்டான்கள்... ஒரே நாளில் நான் ஒட்டாண்டியாகி விட்டன். இதுக் கெல்லாம் காரணம், உந்தத் தமிழரசுக் கட்சிதான்.''

''ஏன் இப்படிச் சொல்லுறியள்...?''

''உவங்களை ஆர் இங்கு வந்து சத்தியாக்கிரகம் செய்யச் சொன்னது? அவர்கள் சத்தியாக்கிரகம் செய்து விட்டுப் போய் விட்டாங்கள். இங்கை நாங்கள் அடி வாங்குகிறம். தமிழனுக்கு அடிக்கலாம் எண்டு சிங்களவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்குக் காட்டிக் கொடுத்திட்டான்கள். யாழ்ப்பாணத்தில போய் உழைக்க முடியுமே? எல்லாம் உவங்களால வந்த வினை...'' என்று நடராசா பொரிந்து தள்ளினார்.

அவரோடு வாதாடுவதில் எதுவித பயனுமில்லை, எனச் சுரேந்திரன் நினைத்தான். பாதிக்கப்பட்டவர், அப்படித் தான் பேசுவார். கொழும்பில் ஆழ வேரூன்றி விட்ட பெரும்பான்மைத் தமிழனின் குரலைத்தான் அவர் ஒலிப்பதாக அவனுக்குப் பட்டது. சொத்துச் சுகங்களோடு ஆடம்பரமாகக் கொழும்பில் வாழ்ந்தவர்களால், தற்போது ஏற்பட்டுள்ள கலவர நிலையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அப்படிப்பட்ட ஒரு சுகபோக வாழ்வை இழந்து யாழ்ப்பாணத்தில் போய் ஒதுங்கிக் கொள்ளவும் அவர்களால் முடியவில்லை.

''என் கடையில் வந்து தோசை சாப்பிட்டவர்களே என் கடையை அடித்து உடைத்தார்கள். உவங்களைச் சும்மா விடமாட்டன்...'' என நடராசா பொருமினார்: ''என் அப்பனுக்குப் பிறந்த ஒருவன் கூட என் கடையைக் கொள்ளையிட்டான்... மேசைமோன்.''

சுரேந்திரன் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆனால், எதுவும் பேசவில்லை.

''அவங்கள் பெரும்பான்மை... அவங்கள் சிங்களத்தை அரசகரும மொழியாக்கினால் இவங்களுக்கு என்ன? ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்டு இருந்தனாங்கள் தானே? அதை மாதிரி சிங்கள மொழியையும் ஏற்றுக் கொண்டால், என்ன குடியா முழுகிவிடும்?''

''நாங்கள் சிறுபான்மைதானே? சிங்களத்தோடு தமிழையும் அரச மொழிகளாக ஏற்றுக் கொண்டால், இவர்களுக்கு என்ன பெரிய நஷ்டம்? நூறு மொழிகளா இங்கை இருக்கிறது? இருக்கிறதே இரண்டு மொழி...? கொல்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர். டி. சில்வா சென்னது போலத்தான் முடியப் போகுது...''

''என்ன சொன்னவர்!...''

''இரண்டு மொழியாயின் ஒரு நாடு; ஒரு மொழியாயின் இரு நாடு என்றார்...''

நடராசா பெரிதாகச் சிரித்தார்.

''1956 இல் இதைக் கேட்டுச் சிரிக்கிறியள் 1986 இல் இன்னுமொரு முப்பது வருடங்களுக்குப் பிறகு, என்ன மாதிரி நிலை உருவாகுமோ?'' என்றபடி, சுரேந்திரன் இறங்குவதற்காக எழுந்தான்.

அவன் விடுதிக்கு வந்த போது, சோமா அவனைத் தேடி இரண்டு தடவைகள் அங்கு வந்து விசாரித்துச் சென்றதாகச் செய்தி தெரிந்தது.

# 19

அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் இந்தக் கடலுக்கு ஓய்வே கிடையாதா? யன்னலூடாக பரந்து விரிந்து கிடக்கும் சமுத்திரத்தையும், கரையில் ஓயாது மோதி நுரை மலர்களைச் சிந்தும் அலைக்கரங்களையும் பார்த்தவாறு சுரேந்திரன் அமர்ந்திருந்தான்.

கடற்பரப்பில் காலைக்கதிர்கள் பரப்பிய ஒளி வெள்ளத்தில் மீன் பிடிக்கும் பாய் விரித்த ஓரிரு வள்ளங்களும், அவற்றிற்கு அப்பால் ஆழ்கடல் வீதியில், கொழும்புத் துறை முகத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் பாரிய கப்பலொன்றும் பார்வையில் பட்டன. பம்பலப்பிட்டிப் புகையிரத நிலையத்திற்குள் வருவதும் போவதுமாக இருந்த றெயின்களின் இரைச்சல் அச்சூழலின் அமைதியைக் குலைப்பனவாக அவனுக்குப்பட்டது. அப்புகையிரத வீதிகளுக்கு அப்பால், கடலரிப்பைத் தடுப்பதற்காகக் குவித்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங் கற்றிணிவுகளில் அவனும் சோமாவும் பல தடவைகள் மாலை வேளைகளில் அமர்ந்திருந்துள்ளார்கள்.

மாலைக்கதிரவனின் அஸ்தமனத்தில், தமது எதிர்கால வாழ்வின் உதயத்திற்கு அவர்கள் அத்திவார மிட்டார்கள். எவ்வளவு கனவுகள் எவ்வளவு நம்பிக்கைகள்...

அக்கா கடிதம் எழுதியுள்ளாள்:

'.. தம்பி, நீ உங்கு ஒரு சிங்களப் பெண்ணுடன் சிநேகிதமாக இருப்பதாக இங்கு கதைக்கிறார்கள். அதைக் கேள்விப்பட்டதும் தளர்ந்து போனேன்...'

அச்காவின் நம்பிக்கை அவன் தான்; யாழ்ப்பாணச் சமூகத்தின் கிடுகு வேலிகளுக்குள் இருந்து பெரு மூச்சு விடும், அவன் தமக்கையைப் போன்ற ஆயிரமாயிரம் குமர்களின் எதிர்கால நம்பிக்கைகள் கூடப்பிறந்த சகோதரங்களில் தான் இருக்கிறது.

அவன் அக்கா அதற்கு விதி விலக்கல்லள்.

'...அண்ணை கட்சி கூட்டமென்று திரிகிறார். நீயாவது ஒழுங்காக எங்கள் குடும்பத்தைக் கவனிப்பாயென எல்லோரும் நம்பியிருந்தோம். அந்த நம்பிக்கையில் மண் விழுந்துவிட்டது '

அவன் ஒரு பெண்ணைக் காதலிப்பதால், அவர்களது வாழ்வின் நம்பிக்கைகள் ஏன் தளரவேண்டும்? அவன் ஒரு சாதாரண கிளறிக்கல் சேவன்ற். அவன் உழைப்பது, அவனுக்கே கொழும்பில் சீவிக்கப் போதவில்லை. அப்படியிருக்க மாதா மாதம், மணியோடரில் ஒரு சிறு பணம் அனுப்பத் தவறுவதில்லை; அதைவிட அவனால் வேறு என்ன செய்துவிட முடியும்? அக்காவிற்கு ஏற்ற ஒரு மாப்பிள்ளையை விலைக்கு வாங்க அவனால் முடியுமா?

அவனது கற்பனை வேறு விதமாகச் சிந்திக்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...இந்த 1956 ஆம் ஆண்டில், உலகம் எவ்வளவு முன்னேறிவிட்டது. யாழ்ப்பாணம்தான் முன்னேறவில்லை. இன்றும் குமர்கள், வீட்டிற்குள் தான் முடங்கிக் கிடக்கின்றனர். பாடசாலைக்குப் போய்விட்டு வந்தால், அதன் பின் வெளியில் அவர்கள் தலைகளைக் காண முடியாது. கொளுத்தும் வெயிலில் கால் நடையாக மாணவிகள் பாடசாலைகளுக்கு நடந்து போக, மாணவர்கள் பலர் சயிக்கிள்களில் பாடசாலை போகிறார்கள். இந்தப் பெண்களும் சயிக்கில்களில் ஏறிச் சவாரி செய்தால், என்ன? பெற்றோர் அனுமதிக்க மாட்டார்கள். தன் மனைவியைக் கூட சயிக்கில் பாரில் ஏற்றிப் பயணம் செல்லாது மனைவி நடந்து வரக் கணவன் சயிக்கிலை உருட்டிக் கொண்டு போவதை அவன் கண்டிருக்கிறான். பெண்கள் வீதிகளுக்கு வரவேண்டும். அப்போது தான் பெற்றோருக்கும் கூடப்பிறந்த சகோதரர்களுக்கும் சுமை ஓரளவாவது குறையும்...?

'சாய், இப்படி எண்ணக் கூடாது' என, தனக்குத் தானே கூறிக் கொண்டான். கொழும்புப் பெண்களைப் போல, யாழ்ப்பாணப் பெண்கள் மாறிவிடக்கூடாது.

இன்று அலுவலகமில்லை; ஆதலால், சற்று ஓய்வாக இருந்துவிட்டு, ஆஸ்பத்திரிக்கு நாகராசனைக் காணச் செல்லவேண்டும். அவனுடைய படுக்கை, வெறுமையாக அறையில் கிடக்கிறது. அவன் அறையில் இல்லாதது, கொடுந் தனிமையாகப்படுகிறது; பின்னேரம் சோமாவைச் சந்திக்க வேண்டும்.

அக்காவின் கடிதம் மீண்டும் நினைவில் வருகிறது.

'...போயும் நீ ஒரு சிங்களத்தியோடு சிநேகிதமாக இருப்பதை அறிந்து அம்மா அழுகிறா. ஐயா இடிந்து போனார். கொஞ்சமாவது நீ யோசித்துப் பார்க்கவில்லை. அண்ணனைக் கொழும்பில் சிங்களவர்கள் அடித்து உதைத்தார்கள். நீ கண்ணால் கண்டாய். அதற்குப் பிறகும் அப்படிப்பட்ட சிங்கள வரோடை சகவாசம் வைக்க உன்னால் முடிகிறதே...'

அக்கா பக்கம் பக்கமாகக் குமுறிக் கொட்டியிருந்தாள். அவளை அவனால் சமாதானப்படுத்த முடியாது. அதற்காக அவனை நம்பியிருக்கும் சோமாவை அவனால் இழக்கவும் முடியாது.

நாகராசன் சுகப்பட்டு வந்ததும் அவனோடு கலந்து பேசவேண்டும். சோமாவை விரைவில் திருமணம் செய்து கொள்வதைத் தவிர வேறு மார்க்கமுமில்லை.

அவன் உடைகளை மாற்றிக் கொண்டு, ஆஸ்பத்திரிக்குப் போகும் எண்ணத்துடன் படிகளில் இறங்கிக் கீழே வந்தபோது, ஹோலில் இருந்த ரெலிபோன் மணி ஒலித்தது. ஓடிப்போய் றிசிவரைக் கரத்தில் எடுத்தான்.

''ஹலோ...''

''மிஸ்ரர் சுரேந்திரன் பிளிஸ்...''

''ஸ்பீக்கிங்...''

நாகராசன் வேலை செய்யும் பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து அவனை அழைத்தார்கள். எதிர் முனையில் சிறிது தயக்கம் தெரிந்தது; சில கணங்கள் தாம்.

'சுரேந்திரன்... உங்கள் பிரெண்ட நாகராசன் இன்று அதிகாலை மரணமானார்...''

''ஓ... கோட்...'' என்று சுரேந்திரன் வீரிட்டான். அப்படியே இடிந்து போய், கரங்களால் தலையில் அறைந்தபடி கதிரையொன்றில் 'பொத்'தென அமர்ந்தான்.

## 20

பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பிரதமர் இல்லம் அன்று மாலை கலகலப்பாக விளங்கியது அவருடைய மகனின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக, அங்கு பிரமுகர்கள் கூடியிருந்தார்கள்.

தமிழ்த்தலைவர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், சுந்தரலிங்கம், செல்வநாயகம் ஆகியோரும் காணப்பட்டனர்.

பிரதமர், சுந்தரலிங்கத்தைக் கட்டியணைத்து வரவேற்றார். கலகலப்பாக அவருடன் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாராளுமன்றத்தில் எப்படி ஒருவரை யொருவர் திட்டிக்கொள்கிறார்கள். சண்டைபிடிக்கிறார்கள் இங்க பார்த்தால் எவ்வளவு அந்நியோன்யமாக இருக்கிறார்கள் பார்த்தீரா?..." என ஒரு எம். பி. இன்னொருவரிடம் கூறினார்.

"அது தான் அரசியல்..." என்றார் மற்றவர்.

"இன்னமும் கொழும்பில் இனக் கலவரம் பூரணமாக அடங்கவில்லை அதைச் சிறிது கவனிக்க வேண்டும்" என்றார் ஒரு தமிழ்த்தலைவர்.

"அதைப் பாராளுமன்றத்தில் பேசுவோம் இந்த மாலைப் பாழுதை அரசியல் கலக்காது இனிமையாகக் கழிப் பாம்..."

"வெளியில் இரு இன மக்கள் அடிபடுகிறார்கள்... அவலப்படுகிறார்கள். இங்கு தலைவர்கள் ஒன்றாக் கூடிக்கு லிக்கிறார்கள்..." என்றார் ஒரு எம். பி.

"அடிபடுவது தொண்டர்கள் தாம்... தலைவர்களல்லர்"

"அதை சிங்கள மக்களும் தமிழ் மக்களும் புரிந்து கொள்ளவில்லையே?..."

"புரிந்து கொள்ளக்கூடாது... அது தான் அரசியல்..."

அவ்விடத்தில் சிரிப்பொலி எழுந்தது.

# 21

ஜேகிவலா பெண்கள் விடுதியின் விருந்தினர் அறையில் சோமாவும் சுரேந்திரனும், ஒருவரை யொருவர் பார்த்தபடி நீண்ட நேரம் எதுவும் பேசாது அமர்ந்திருந் தனர்.

இருபது நாட்களுக்குப்பிறகு அன்று தான் அவர்கள் சந்திக்கின்றார்கள்.

"சோமா... உன்னைச் சந்தித்து எவ்வளவு நாட்கள் ஆகின்றன... பல தடவைகள் முயன்றேன் முடியவில்லை."

சோமாவின் விழிகள் திடீரென கலங்கின. கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மத் தொடங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோமா..." அவன் துடித்துப் போய் அவளை அணைத்தான். "என்ன சோமா என்ன? என்ன நடந்தது...

அவள் ஓரிரு நிமிடக் கழிவில் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் விழிகள் நீரைச் சிந்தின.

"சுரேன்... என் அண்ணன் இறந்து போனான்?..."

உண்மையில் அவன் இதயம் ஒரு கணம் அதிர்ந்தது அவனால் எதுவும் பேசவே முடியவில்லை. விஜயபாலவின் மீது ஆரம்பத்தில் அவனுக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. பின்னர் அவன் காடையர்களோடு சேர்ந்து தன்னைத் தாக்காதுவிட்ட அந்தச் செயலின் விளைவாக ஓரளவு மனிதவுணர்வு உள்ளவன் என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தது.

"என் நண்பன் நாகராசனும் கலவரத்தில் கொல்லப்பட்டு விட்டான்; சோமா... சிங்களக் காடையர்கள் பஸ்சிலிருந்து அவனை வெளியே இழுத்துப்போட்டு அடித்துக் கொன்று விட்டார்கள்... ஆஸ்பத்திரியில் அவன் இறந்து போனான்..."

சோமா அவனை ஆழமாக ஊன்றிப் பார்ப்பதாகப் பட்டது; அவள் விழிகளில் அவன் முன்னர் எப்போதும் காணாத ஒரு வித வெறியுணர்வின் நிழலாட்டத்தைக் கண்டான்.

"சிங்களவர் மட்டுமா, சுரேன் காடையர்கள்? தமிழர்களில் காடையர்கள்? இல்லையா?... மருதானையில் சும்மா நின்றிருந்த அண்ணனைத் தமிழர்கள் தாக்கினார்கள்..."

"நம்பமுடியாது, சோமா? உன் அண்ணன் விஜயபால சிங்களக் காடையரோடு சேர்ந்து, தமிழரைத் தாக்கியதை நான் என் கண்களால் கண்டேன்... நான் வந்த பஸ்சிலிருந்த அத்தனை தமிழரதும் பொருட்களைப் பறித்தெடுத்துக்கொண்டு, அவர்களை உன் அண்ணனும் ஏனையோரும் கதறக் கதறத் தாக்கினார்கள்..."

"பொய்... நான் நம்பமாட்டேன். செத்துப்போன அண்ணன் மீது வீணாகப் பழிசுமத்த வேண்டாம்... பொறுங்கள் எப்பா, சுரேன்! பொய் சொல்ல வேண்டாம்... என் அண்ணன் அப்படியல்ல. மருதானையில் சும்மா நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனை, ஒரு தமிழன் பாய்ந்து, தொண்டையில் கடித்துக் குதறி... வெறி நாய்... தெமிளயக்கோ... பறைவல்லோ... பறைநாய்'' சோமா, வீரிட்டலறினாள்.

அவள் அலறலில் அந்த விடுதி ஒரு கணம் கிடுகிடுத்துப் போயிற்று. சிலர் ஓடி வந்து எட்டிப்பார்த்தார்கள்.

''என்ன... என்ன?...''

''ஒன்றுமில்லை...'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள், சோமா.

சுரேந்திரன் சிலையாகிவிட்டான் இதயத்தில் ஆயிரமாயிரம் சன்னங்கள் நுழைந்து வெளியேறிய உணர்வு. அயர்வு.

''நான் பொய் சொல்லவில்லை, சோமா... நாகராசனின் மரணத்திற்கும் விஜயபாலதான் காரணம்... ஏன் அப்படி ஒரு துவேஷம் அவனுக்குத் தமிழர்மீது...?''

சோமா விருட்டென்று இருக்கையைவிட்டு எழுந்தாள். அவள் உடல் வெடவெடவென நடுங்கியது.

''என் அண்ணனை எனக்குத் தெரியும். வீணாய்ப்பழிகூற வேண்டாம். தமிழரே இப்படித்தான்... போயிடுங்க... என் அண்ணன் மீது பழிபோடும் உங்களோடை... எப்படி...? ஏன் என் அண்ணனைப் பழிகூறி... போயிடுங்க... பிளீஸ் போயிடுங்க...''

சோமா, விருந்தினர் அறையைவிட்டு வெளியே வந்து, மாடிப்படிகளில் ஏறித் தன் அறைக்கு விரைந்து ஓடிச் சென்றாள்.

''சோமா...'' என்று அழைக்க எழுந்த ஆவல், தொண்டைக்குள் தடைப்பட்டுச் சிதைந்தது. மனம் கலங்கிச் சோர்ந்தது. மெதுவாக விடுதியைவிட்டு வெளியே வந்தான்-

காலி வீதியை நோக்கி நடக்கும்போது, துயரத்தின் இருள்போர்வை அவனை மூடியதுபோல ஒரு தவிப்பு அவனை ஆட்கொண்டது.

அவன் காலி வீதியில் ஏறிய போது, பிரதமர் மாளிகையில் சிரிப்பொலி எழுந்தது.

— முற்றும் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கிய வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org